விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 17 ஞாயிற்றுக்கிழமை (30.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 42

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது, பாதுகாப்பானது, நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310, 021 2227555, 021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# 15 அம்ச தேசியக் கொள்கை ஐ.தே.கவினால் முன்வைப்பு

(நமது நிருபர்)

அரசியல் குரோதம், யுத்தம், கடல்கோளால் சின்னாபின்னமடைந்திருக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப 15 அம்ச நிகழ்ச்சித் திட்டங்களுடனான தேசியக் கொள்கையொன்றை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருக்கிறது. அரசாங்கங்கள் மாறினாலும் இந்தக் கொள்கையை 15 ஆண்டுகளுக்கு முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொது மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.குழுத் தலைவர் அப்பலோவில் அனுமதி

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெவ்டே கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரின் குடலில் இருந்து இரண்டு கட்டிகள் நீக்கப்பட்டதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. (க-08)

## அரசின் புறக்கணிப்பு நடவடிக்கை பேச்சுக்களுக்கு தடையாக அமையும்

### சுவிஸ் தூதுவரிடம் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

சுனாமியால் நாட்டின் வடக்குக் கிழக்கு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பினும், அரசாங்கம் தெற்குப் பகுதியை மட்டுமே ஆர்வத்துடனும், மும்முரமாகவும் அபிவிருத்தி செய்துவருகிறது என ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுவிஸ் தூதுவரைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இக்குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாக அமையக் கூடும் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

கிழக்கும் வடக்கும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற போதும், தெற்கில் மட்டும் அரசாங்கம் நிவாரணங்களை வழங்குவதும், புனரமைப்பு வேலைகளை உடன் மேற்கொள்வதும் வருத்தத்திற்குரியது.

பாதிக்கப்பட்ட மக்களிடம் கலந்துரையாடியே அவர்களின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்கு பயணம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோர் நேற்று லண்டன் பயணமாகினர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கொழும்பு நோக்கிச் சென்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



கொரிய நாட்டு குயுங்பூக் தேசிய பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் 40 பேர் நேற்றிரவு யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் கலந்துகொண்ட சி.இளம்பரிதி, கொரியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் சுயுங் ஜேமையுங், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் கலைவிழி ஆகியோரைப் படங்களில் காணலாம்.

## அரச சார்பற்ற நிறுவனங்களூடாக பணிகளை முன்னெடுக்கவேண்டும்

### நெதர்லாந்து அதிகாரிகள் வலியுறுத்து

(கொழும்பு)

நெதர்லாந்து நாட்டு வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் குழுவினரை தமிழீழ விடுதலைப் புலிகள் நெதர்லாந்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த வியாழக்கிழமை நெதர்தின் டென்ஹாக் நகரிலுள்ள வெளிவிவகார அமைச்சுக் கட்டடத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், தமிழீழ விடுதலைப்புலிகளின் லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவின் பொறுப்பாசிரியர் நிலவன் கலந்துகொண்டார்.

நெதர்லாந்தின் தெற்காசியப் பகுதிக்கான வெளிவிவகார அமைச்சர் வில்பிரெட் மோர், தெற்காசியப் பகுதிகளிற்கான முக்கிய பிரதிநிதி டிக்கி மெதோஸ்த் அம்மையார் மற்றும் மனித உரிமைகள் சமாதானத்திற்கான பிரதிநிதி சந்திரா பெல்லகுறோம் அம்மையார் ஆகியோர் கலந்துகொண்டு தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.

ஆழிப்பேரலையினால் அதிகளவு பாதிக்கப்பட்ட வடக்குகிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் புறக்கணிப்பற்ற முறையில் கிடைக்கவேண்டுமென்பதையும், போர்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்ற இராணுவமே தற்போது மக்களின் நலன்புரி நிலையங்களை பொறுப்பெடுத்திருப்பது பற்றியும் தமிழ் மக்கள்மீது நீண்டகாலமாக அரசு காட்டும் புறக்கணிப்புகள் தொடர்பாகவும் விரிவாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக நெதர்லாந்தின் தெற்காசியப் பகுதிக்கான வெளிவிவகார அமைச்சு கருத்து தெரிவிக்கையில்,

இவ் அனர்த்தத்தால் தமிழ் மக்களே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் எமக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

அதனால் நாம் தமிழ் மக்களுக்கு உதவிகள் கிடைப்பதை தொடர்ந்தும் கண்கீாணிப்பதுடன், நெதர்லாந்து அரசினால் பாதிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச ஆதரவினை சமாதான முயற்சிகளுக்கு பயன்படுத்துவோம்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தை அடுத்து இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் சர்வதேச ஆதரவு சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படவேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சகல அரசியல் கட்சிகளும் ஊடக, வர்த்தக, தொழிற்சங்க, சிவில் சமூகக் குழுக்களும் இரு தசாப்தகால இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை ஏற்படுத்திக் கொள்ள தமது பங்களிப்பினை வழங்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சுனாமி அனர்த்தத்தின் பின் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் என்ற தொனிப்பொருளில் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற விசேட கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.(12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியாவின் பங்களிப்பை விரும்பும் ஜனாதிபதி அமெரிக்காவின் உதவியை உதறித்தள்ளுகிறார்?

(கொழும்பு)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாட்டுப் படைகள் தமது பணிகளை நிறைவு செய்து தத்தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்வதையடுத்து அமெரிக்காவும் தனது படைகளில் ஒரு பகுதியை இலங்கையில் இருந்து விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் இந்தியா சார்ந்த நிலைப்பாடு குறித்து அமெரிக்கப்படைத் தரப்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அண்மையில் இந்திய கடற்படையினர் ஜனாதிபதியினை சந்தித்துப் பேசியபோது இந்தியாவின் உடனடி உதவிகளை ஜனாதிபதி நன்றி கூர்ந்து பாராட்டியதுடன் நாட்டின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு இந்தியா உதவி புரிய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தமை அமெரிக்கத் தரப்பை ஓரங்கட்டும் நடவடிக்கையென அரசியல் விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.

பிராந்திய ஆதிக்கம் மிக்க இந்தியாவின் பங்களிப்புடன் இலங்கையின் இன விவகாரத்திற்குத் தீர்வுகாண்பதையே கூட்டமைப்பு அரசாங்கம் விரும்புவதாகவும், இதனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியா மீது அக்கறையினை அதிகம் வெளிப்படுத்திவருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதற்கிடையில் அடுத்த ஆண்டு இறுதி வரை இலங்கையில் நிலைகொண்டிருப்பதற்கு ஏதுவாகவும், மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கப் படைகள் ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தமையும் இதற்கான கருவிகளை இறக்குமதி செய்திருந்தமையும் தெரிந்ததே,

இந்நிலையில் ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும், இந்தியா சார்ந்த நிலைப்பாடுகள் வெளியானதை அடுத்து இலங்கையில் தங்கியிருக்கும் திட்டத்தைக் கைவிட்டு அமெரிக்கப் படைகள் நாடுதிரும்பத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க இதுவரை ஆயிரத்து 600 துருப்புக்கள் இலங்கையில் தரையிறக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலியிலும் யாழ்ப்பாணத்திலும் இவ் அமெரிக்கப் படைகள் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், தற்போது இவர்கள் தமது பணிகளை நிறைவு செய்துள்ள நிலையில் மீள அமெரிக்கா திரும்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமெரிக்கப் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. (க-9)

# கூட்டமைப்பு எம். பிக்கள் நிதியுதவி வழங்க வேண்டும்

## மணற்காடு இ.ச.பொ.அ.அமைப்பு கோரிக்கை

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிப்படைந்த தமிழ் மக்களின் துயர்துடைப்பு நிதியத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது இரண்டு மாத சம்பளத்தையாவது வழங்கவேண்டும் என மணற்காடு இளைஞர் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களால் பெரியளவில் பண உதவி செய்ய முடியாவிட்டாலும் தங்களது இரண்டு மாதச் சம்பளப்பணத்தை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்டோருக்கு இது பயன்படும்.

ஸ்ரீலங்கா அரசு எம்மைப் புறக்கணித்துள்ள சூழ்நிலையில் இத்தகைய நிதி உதவிகள் மாணவர்களின் கல்வித்தேவைக் காவது உதவும் என மேற்படி கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-43)

# சுனாமி பேரலை அனர்த்தத்தினால் 827 சிறுவர் அனாதையாகினர்

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக 827 சிறுவர்கள் பெற்றோர், உறவுகளை இழந்து அனாதையாகியுள்ளனர் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இச்சிறுவர்களைப் பாதுகாக்கும் முகமாக புதிய திட்டம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றது.

இந்த சிறுவர்கள் தற்போது அரசாங்க ஆதரவிலான சிறுவர் விடுதிகளிலும், சர்வோதய விடுதிகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நலன்கள் பேணப்படும் என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச)


சிறு விளம்பரம்

வெளிவந்துவிட்டது

உலகத் தமிழர் குரல் 8 ஆவது சஞ்சிகை பல பக்கங்களுடன் வெளிவந்துவிட்டது. யாழ். நகரில் எங்கும் கிடைக்கும். ரூபா 40/- தபால் / காசுக்கட்டளை ரூபா 50 /- அனுப்பி அஞ்சலில் பெறலாம். ஆ.சண்முகலிங்கம், பரமநாதன் ஹவுஸ், மானிப்பாய் வீதி, தாவடி கொக்குவில். (9251)


# ஞாபகார்த்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆ.க.அண்ணாமலை ஞாபகார்த்தக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அண்ணாமலை ஞாபகார்த்த நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி புதன் கிழமை பி.ப.5.00 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வல்லிபுரம் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், 'சுனாமியால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார விளைவுகள்' எனும் விடயம் பற்றி நாவல திறந்த பல்கலைக்கழகப் பேராசிரியர் எச்.சிறியானந்த உரை நிகழ்த்தவுள்ளார். (ற)

# சர்வோதய தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவாசங்கத்தின் காந்தி நினைவு சர்வோதய தினமான இன்று காலை 11.00 மணிக்கு யாழ்.வைத்தியசாலை வீதியிலுள்ள காந்தி சிலைக்கு மாலையிட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

பி.ப 3.00 மணிக்கு கந்தர்மடம் குமாரசாமி வீதியில் உள்ள வேதாந்த மடத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறும்.

மேற்படி நிகழ்வு க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'மகாத்மா காந்தியடிகளின் தத்துவார்த்த கல்வியியற் சிந்தனைகளும் பிரயோகங்களும்' எனும் நினைவுப் பேருரையை யாழ்.கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து சஞ்சிகை 'காந்தியம்' மலர் 19 இதழ் 2 வெளியிடப்படவுள்ளது. (க-9)

## இராசி பலன்

30.01.2005 (தை 17 ஞாயிற்றுக்கிழமை)
பஞ்சமி முன்னிரவு 10.21 மணிவரை
உத்தரம் மு.ப 9.32 மணிவரை
இராகுகாலம் 05.06 - 6.36 மணிவரை
சுபநேரம் 09.36 -11.06 மணிவரை
அமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்திப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன நன்மை, தெய்வ சிந்தை. |
| இடபம் | புத்திரரால் கவலை, உடல்நலக் குறைவு, சொத்து பிணக்கு, காரிய தாமதம். |
| மிதுனம் | தனவிரயம், தன்நம்பிக்கைக் குறைவு, மாதா சுகம், ரோக நிலை. |
| கடகம் | கீர்த்தி, முயற்சி கைகூடும், இஸ்திரி சுகம், தொழில் சிந்தை. |
| சிங்கம் | அதிக செலவு,, மனோ சங்கடம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு. |
| கன்னி | வெகுமானம், போசன சுகம், மாதர் நட்பு, புதிய முயற்சி. |
| துலாம் | சோம்பல் நிலை, தனவிரயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், உறவினர் வெறுப்பு. |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, ஆனந்தம், குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம். |
| தனுசு | தொழில் சிந்தை, நன்கொடை, காரிய அனுகூலம், பிரபுத்தனம். |
| மகரம் | சரீர பிரயாசை, வீண்பயம், முயற்சி தாமதம், கட்டுப்பாடு. |
| கும்பம் | மனக் கவலை, பொருள் விரயம், சரீர பீடை, முயற்சி தாமதம். |
| மீனம் | மாதர் நட்பு, தேக நலன், வாகன சுகம், முயற்சி கைகூடும். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# காரைநகரில் ஒருவாரத்தில் மட்டும் 40வீடுகளில் திருட்டு

(காரைநகர்)

காரைநகரில் ஒரு வாரத்திற்குள் நாற்பதிற்கு மேற்பட்ட வீடுகளில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் காரைநகர் விளானைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

காரைநகர் விளானைப் பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்கள் இன்னமும் மீளக் குடியமராது சங்கானை, சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களில் வாழ்கின்றனர்.

ஆயினும் தமது வீடுகளை வாரத்திற்கு ஒரு முறையேனும் வந்து பராமரித்துச் செல்கின்றனர்.

இவ்வாறு ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து கடந்த வாரம் நாற்பதிற்கும் மேற்பட்ட வீடுகளில் இருந்த வீட்டுப் பொருட்களை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

அததுடன், கட்டில், கதிரைகளுடன் வீட்டின் கதவுகள் பலவும் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு களவாடப்பட்ட பொருட்கள் இரவு வேளைகளில் காரைநகர் தென்கிழக்குப் பகுதிக் கடல்வழியாக அராலி, ஊர்காவற்றுறைப் பகுதிகளிற்கோ அல்லது பொன்னாலைப் பாலத்தினூடாகவோ காரைநகரிற்கு வெளியே கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக காரைநகர் பகுதி பொலிஸாரிடமும், காரைநகர் பிரதேச செயலகத்திலும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் சட்டவிரோத முறையில் போலி அனுமதிப்பத்திரத்துடன் மரங்கள் தறிக்கப்பட்டு ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு காரைநகர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி கடந்த வாரம் காரைநகர் பகுதியில் சட்டவிரோதமாக மணல், ஊரி ஏற்றுவதும் அதிகரித்துள்ளது.(க-246)

# பெற்றோரை இழந்த சிறுவர்கள் புலிகளின் பிரதேசத்தினுள் தஞ்சம்

## புலித்தேவன் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் 40 சிறுவர்களை தமது படையில் சேர்த்துக் கொண்டனர் என ஐ.நாவின் குழந்தைகள் நிதியம் அமைப்பான யுனிசெப் தெரிவித்த கருத்துக்களை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

சுனாமியினால் பெற்றோர்களை இழந்த அல்லது இடம்பெயர்ந்த பல சிறார்கள் வடக்கு-கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தஞ்சமடைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

இவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் தற்போது ஈடுபட்டிருப்பதாகவும், இந்தத் தகவல்கள் கிடைத்ததும் இவர்களின் பெற்றோர்கள் உயிருடன் இருந்தால் பெற்றோர்களிடமும் அல்லது ஆதரவற்ற குழந்தைகளுக்கான காப்பகங்களிலும் இந்தச் சிறுவர்கள சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-04)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
பார்த்தீபன், ரிச்சாபலட்
வடிவேல் மற்றும் பலர் நடித்த
காதல் கிறுக்கன்
கா.நே -11.00, 2.45, 6.00 (பு.நே)







# வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டமையினாலேயே ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பிக்கு இடையில் முரண்பாடுகள்

## ஆயினும் உடன்பாட்டை வலுப்படுத்தவே போராட்டம் என்கிறார் ஜே.வி.பி எம்.பி சந்திரசேகரன்.

(கொழும்பு)

***ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் -மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடுகள் வலுப்பெற்றுக் கொண்டிருப்பதாகவும், இதனால் ஜே.வி.பியின் கூட்டணியை முறித்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச் சேரவுள்ளதாகவும் வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானது.***

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டவை. இதனால் எமக்குள் முரண்பாடுகள் உண்டு. எனினும், உடன்பாடுகளும் உண்டு. உடன்பாடுகளை வலுப்படுத்தவே எமக்குள் போராட்டம் என்கிறார் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன்.

நேற்று முன்தினம் பிபிஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறு தரப்பட்ட விடயங்கள் குறித்தும் சந்திரசேகரன் எம்.பி அச்செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்,

நிவாரணப் பணிகள் நூற்றுக்கு நூறு வீதம் இல்லாவிட்டாலும் கூட இந்த நாட்டு மக்கள் திருப்திபடக்கூடிய அளவுக்கு இந்நிவாரணப்பணிகள் அனைத்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆனால் கடந்த மாதம் 26ஆம் திகதி இலங்கை மக்கள் மாத்திரமல்ல உலகத்தில் உள்ள எவருமே எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சுனாமி அனர்த்தமானது ஒட்டுமொத்த மக்களையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.

இப் பேரழிவிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முழுநாட்டு மக்கள் மத்தியிலும பாரிய மனிதாபிமானமே மேலோங்கியருக்கின்றது. இன்று அந்த மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற பொழுது ஒருசில முறைப்பாடுகள், முரண்பாடுகள் இருந்தாலும் கூட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் திருப்திகரமான முறையில் இன்று தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது என்பதை தெளிவாக மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியின் விபரம் வருமாறு:

***கேள்வி: நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்காக பொது செயலணிகள் நியமிக்கப்பட்டுள்ளன. இதற்குள் ஜே.வி.பியினரோ, ஜே.வி.பி ஆதரவாளர்களோ இல்லை.***

***அரசின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பி இந்தச் செயலணிகளில் சேர்க்கப்படமை குறித்து கட்சிக்குள் அதிருப்தி நிலவுவதாகவும், ஜே.வி.பிக்கும் அரசுக்கும் இடையே உறவு அவ்வளவு சுமூகமாக இல்லை என்று செய்திகள் ஊடகங்களிலும் வெளிவருகின்றன. இந்தச் செய்திகள் உண்மையா?***

பதில்: இதில் எந்தவிதமான உண்மையும் கிடையாது. விசேடமாக இந்தச் செய்தி தொடர்பாக ஒருசில ஊடகங்கள் வெளியிடுகின்ற கருத்துககள் சார்பில் விசேடமாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதேயாகும.

ஆனால் நாங்கள் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறமுடியும் ஸ்ரீலங்க சுதந்திரக்கட்சி என்பதும் ஜே.வி.பி என்பதும் இரண்டும் வேறுபட்ட கொள்கைகளை உடைய கட்சிகள்.

அதன் அடிப்படையில் எங்களுக்குள் முரண்பாடுகளும் இருக்கின்றன. உடன்பாடுகளும் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளுக்கான போராடடமானது முக்கியமாக இந்த உடன்பாட்டை மேலும் வலுப்படுத்துவதற்கான போராட்டமே ஒழிய, அதனை முறிப்பதற்கான அல்லது இந்தக் கூட்டமைப்பை உடைத்தெறிவதற்கான போராட்டம் அல்ல என்பதை மாத்திரம் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம.

***கேள்வி: முன்னெல்லாம் நீங்கள் அமெரிக்காவை எதிர்த்து கருத்து வெளியிட்டு வந்திருக்கின்றீர்கள். சுனாமிப் பேரலைக்குப் பின்னர் இப்போது அமெரிக்கப் படைகள் இங்கு வந்து நிவாரணப்பணிகளில் பங்குகொண்டிருக்கின்றன. இதனை வைத்து அமெரிக்காவின் மீது உங்கள் போக்கு மாறிவிட்டது என எடுத்துக்கொள்ளலாமா?***

பதில்: இல்லை. அமெரிக்கா குறித்தான ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. ஆனால், கடந்த 56 வருடங்களாக ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் எமது நாட்டைப் பிச்சைக்கார நாடாக மாற்றியிருக்கின்றார்கள்.

ஆகவே, நாங்கள் யாரும் எதிர்பார்த்திராத நிலையில் ஏற்பட்ட அந்த மாபெரும் அனர்த்தத்தின் போது உதவிக்கு வந்த அவர்களை விரட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதா? அல்லது உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதா? என்ற கேள்வியெழுகின்றது.

நிச்சயமாக எங்களுக்கு மிகத் தெளிவான ஒரு நிலைப்பாடு இருக்கின்றது.

ஆனால் இந்தத் தெளிவான நிலைப்பாட்டினை ஊடகங்கள் வேறு விதமாக வெளிப்படுத்திவருகின்றன.

ஜே.வி.பியால் இன்று முன்னெடுக்கப்படுகின்ற நாட்டு மக்களுக்குச் சாதகமான நடவடிக்கைகள் தொடர்பில எந்தவொரு செய்தியும் வெளியிடாது நாட்டு மக்களிடையே விசேடமாக முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கான கருத்துக்களை அவ் ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றமை கண்டிக்கத்தக்கது.

அதனால் ஜே.வி.பியின் அமெரிக்கா தொடர்பான நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை என்பதை நாங்கள் குறிப்பிட்டாக வேண்டும். (ரு-4)

# கரையிலிருந்து 100 மீற்றர் பகுதிக்குள் கட்டடங்கள் எதுவும் அமைப்பதில்லை

## அரசின் முடிவில் மாற்றமில்லை என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

கடற்கரையிலிருந்து நூறுமீற்றர் பகுதிக்குள் எந்தவிதமான கட்டடங்களையும் நிர்மாணிக்க அனுமதிப்பதில்லையென்பது அரசாங்கத்தின் ஏகோபித்த முடிவாகும். சகல அரசியல் கட்சிகளும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. மேலும், அமைச்சரவையின் அங்கீகாரமும் இதற்கு கிடைத்துள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடற்கரைப் பிரதேசததில கரையிலிருந்து நூறு மீற்றருக்குள் எந்த வித கடடுமானப் பணிகளையும் மேற்கொள்வதில்லையென அரசாங்கம் எடுத்திருந்த முடிவை உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுர பண்டாரநாயக்க கடுமையாக விமர்சித்திருந்தார்.

இலங்கைக்கு அதிக வருமானம் ஈட்டித் தரும் சுற்றுலாத்துறைக்கு இத்தீர்மானம் பாதகமென்பதால் இவ்விடயத்தில் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்குமாறு கோரும் அமைச்சரவை நகல் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் அநுரபண்டாரநாயக்க அண்மையில் செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்திருந்தார்.

மேலும், கடற்கரையிலிருந்து நூறு மீற்றருக்குள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில்லையென்ற அரசின் முடிவு முட்டாள்தனமானது என்றும் அமைச்சர் அநுர பண்டாரநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

இவற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்படி கருத்தைக் கூறியுள்ளார்.

மக்களின் நலனைக் கருத்திற் கொண்டும், எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தம் நேர்ந்தால் மக்கள் எவரும் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதிப் செய்யும் முகமாகவுமே கடற்கரையிலிருந்து நூறுமீற்றர்



பிரதேசத்துக்குள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில்லையென அரசாங்கம் தீர்க்கமான முடிவை எடுத்தது.

இதற்கு யார் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அரசாங்கம் தனது முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் நேற்று முன்தினம் மாலை அறிக் கையொன்றையும் வெளியிட்டுள்ளது. (ரு)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மக சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணியளவில சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கலாநிதி க.கலாமணி 'மால்வண்ணன்' என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ரு-5)

* * *

## வழமைக்குத் திரும்பும் வடமராட்சி மக்கள்

(மருதங்கேணி)

சுனாமி கடல்பேரலையால் சொத்துக்களை, உடமைகளை, உயிரிழப்புக்களை தொழில் வாய்ப்புக்களை இழந்த வடமராட்சி வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள மக்கள் சிறிது சிறிதாக தமது தொழிலை ஆரம்பிப்பதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்சமயம் பருத்தித்துறைப்பகுதிகளிலுள்ள கடற்றொழிலாளர்களில் சிலர் வீச்சுவலைகளைக் கொண்டு மீன்பிடித்து வருகிறார்கள். (ரு-35)

* * *

## கால்நடைகளால் பயிர்கள் நாசம்

(காரைநகர்)

காரைநகரில் நெற்பயிர்களை கால்நடைகள் அழித்துவருவதாக காரைநகர் பிரதேச செயலகத்தில் விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

காரைநகரில் பெரும்போக பயிர்ச் செய்கையின் அறுவடைக் காலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் கால்நடைகள் நெற்பயிர்களை அழித்து வருவதால் விவசாயிகள் பெருமளவு நட்டம் அடைந்து வருவதாகவும் குறித்த கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகளால் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-246)

* * *

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களுக்கு இராணுவத்தினர் உதவிகள்

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை மற்றும் முனை பிரதேசங்களில் உள்ள மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இதற்கமைய மேற்படி பிரதேச கிராம மீனவர்கள் பயன்படுத்திய பீன்பிடிப் படகுகளை கடலுக்கு எடுத்துச் செல்வதற்கு முடியாமலும், படகுகளை கரையில் நிறுத்தி வைக்க முடியாத வகையிலும் கரையோரப் பிரதேசம் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டிருந்தது. இவற்றை சீர்திருத்தி மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் படையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய 524 படையணியின் கட்டளையிடும் அதிகாரியின் மேற்பார்வையில் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இவ வேலைத்திட்டங்கள சுமார் 10 நாட்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை மேற்படி படையணியைச் சேர்ந்த 70 இராணுவ வீரர்களும், பிரதேச வாசிகள் 30பேரும் மேற்கொண்டு வருகின்றனர்.

சுனாமி பேரலையினால் கரைககு இழுத்துவரப்பட்ட கற்கள் மற்றும் கட்டட இடிபாடுகள் போன்றவற்றை அப்புறப்படுத்துவதற்கு கெட்டபிளர் போன்ற கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சேதமடைந்துள்ள கரையோரப் பிரதேசங்களை புனரமைத்து மீனவர்களின் படகுகளை கடலுக்கு எடுத்துச செல்லவும், படகுகளை கரையில் நிறுத்திவைக்கவும் தகுந்த வகையில் கரையோரங்களை இவர்கள் சுத்தம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு பாதிப்படைந்துள்ள மீனவர்களுக்கு உதவும் வகையில இராணுவத்தினர் முன்னெடுத்துள்ள இந்த வேலைத்திட்டங்கள் மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் பொருளாதாரத்துறையைக் கட்டியெழுப்பி மீண்டும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளக்கூடிய வகையிலான இராணுவத்தினரின் இந்த ஒத்துழைப்புக்கு பிரதேச மக்கள் பாதுகாப்புக் படையினருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (ரு)

## அமெ.மருத்துவக் குழுவினர் காரை.கடற்படைத் தளத்தில்

(திருநெல்வேலி)

மந்திகை மருத்துவமனையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிக்க வந்த அமெரிக்க கடற்படை மருத்துவக் குழுவினர் தற்போது காரைநகர் கடற்படைத்தளத்தில் தங்கிநின்று கடற்படையினர்க்கு மருத்துவப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

மந்திகை மருத்துவமனையில் கடமையாற்றிய அமெரிக்க கடற்படையினரை விட மேலும் 50 பேர் கொணட அமெரிக்க கடற்படைக் குழுவினர் பலாலி விமானப்படைத் தளத்திற்கு வந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ரு-43)

## தனியார் காணியூடாக வீதி அமைப்பு

(காரைநகர்)

காரைநகரில் தனியார் காணி ஒன்றினூடாக புதிதாக வீதி அமைக்கப்பட்டு வருவதாக குறித்த காணியின் உரிமையாளரால் காரைநகர் பிரதேச செயலகத்திலும், காரைநகர் பிரதேசசபை உப அலுவலகத்திலும், யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் மருதபுரம் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வீதி தனியார் காணி ஒன்றினை ஊடறுத்து குறித்த காணியின் உரிமையாளரின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை உடனடியாக நிறுத்தி உரியவர்கள் மீது நடவடிக்கை எடுத்துதவுமாறு உரிமையாளரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (க-246)

# இன்று ஒரு தகவல்

## இரவு ஏன் இருட்டாக இருக்கிறது?

இருநூறு வருடங்களுக்கு முன்பு ஒருவருக்கு ஒரு சந்தேகம் வந்தது. என்ன சந்தேகம் என்று கேட்கிறீர்களா? வேறு ஒன்றுமில்லை. "இரவு ஏன் இருட்டாக இருக்கிறது?" இது தான் அவருக்கு வந்த சந்தேகம்.

அவரது பெயர் ஜெ.பி.எல். டிசே சாக்ஸ். சுவிற்சர்லாந்தில் வாழ்ந்தவர். அவர் தான் இந்தக் கேள்வியை முதலில் எழுப்பியவர். இரவு ஏன் இருட்டாக இருக்கிறது? என்று அவர் இந்தக் கேள்வியை நம்மைப் பார்த்துக் கேட்டிருந்தால் உடனே பதில் சொல்லியிருக்கலாம். இரவில் சூரியன் இல்லை! அதனால் இருட்டாக இருக்கிறது என்று.

ஆனால் விஞ்ஞானிகள் அல்லது விபரம் தெரிந்தவர்கள் இந்தப் பதிலை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஏன் தெரியுமா? இப்போது நீங்களே யோசித்துப் பாருங்களேன். விண் மீன்கள் தாமாகவே ஒளிரக்கூடியன. சூரியனும் ஒரு விண்மீன்தான். அதற்கும் அந்த ஒளிரும் சக்தியுள்ளது. அதனால்தான் அது நமக்குத் தேவையான ஒளியையும், வெப்பத்தையும் பகலில் கொடுக்கின்றது. ஆனால் இரவில் ஏகப்பட்ட நட்சத்திரம் வானில் உள்ளது. ஒவ்வொன்றும் ஒரு சூரியன் மாதிரி. அப்படி இருக்கும் போது பகலில் இருப்பதை விட அதிகமான வெளிச்சம் பூமியில் இருக்க வேண்டுமே! ஏன் இல்லை என்று ஒரு கேள்வியை அடுத்ததாக நம்மிடம் கேட்டால் என்ன செய்வது? "நீ கேள்வி கேட்பதற்கு நான்தானா கிடைத்தேன் வேறு விபரமான ஆளாகப் பார்" என்று சொல்லிவிட்டு நழுவவேண்டியதுதான்.

நட்சத்திரங்கள் பூமியிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் உள்ளன. அதுமட்டுமல்ல அதிலிருந்து வரும் ஒளியாற்றல் மாறுபடுகிறதாம். எப்படி மாறுபடுகிறது? பூமிக்கும் நட்சத்திரத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவோ அந்தத் தூரத்தின் தலைகீழ் விகிதத்தில் மாறுபடுகிறது. அதனால் இடைப்பட்ட தூரம் அதிகரிக்க அதிகரிக்க நட்சத்திரத்திடமிருந்து பூமிக்கு வந்து சேரும் ஒளியின் அளவு மிகவும் குறைந்து போய் விடுகிறது இது ஒரு விளக்கம். அதுவும் உண்மைதான். இருந்தாலும் இதில் இன்னுமோர் விடயத்தையும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

இப்போது ஒரு உதாரணத்திற்கு சூரியனிடமிருந்து வந்து சேரும் வெளிச்சத்தில் பத்து இலட்சத்தில் ஒரு பங்கு வெளிச்சம் தான். ஒரு நட்சத்திரத்திலிருந்து இங்கு வந்து சேர்வதாக வைத்துக்கொள்வோம். அப்படி என்றாலும் பத்து இலட்சம் நட்சத்திரம் நட்சத்திரங்களிடமிருந்து பூமிக்கு வந்து சேரும் மொத்த வெளிச்சத்தையும் கூட்டினால் ஒரு சூரியனிடமிருந்து வரும் அளவு வெளிச்சம் இருக்க வேண்டுமே!

இப்போது மறுபடியும் அந்த முதல் கேள்வியை யோசித்துப் பாருங்கள். "இரவு ஏன் இருட்டாக இருக்கிறது?" சரி... இப்போது அந்தக் கேள்வி ஒருபுறமிருக்கட்டும். ஒரு சிறிய செயல் முறையை செய்து பார்க்கலாம். இரவில் ஒரு இருட்டான பகுதியில் நில்லுங்கள்! வெளிச்சமான பகுதியில் உள்ள ஒரு சுவரை ஒரு சிறு குழாய் மூலமாகப் பாருங்கள். ஒரு காகிதத்தை குழாய் மாதிரி சுருட்டிக் கொள்ளலாம் 5 அல்லது 6 அங்குல நீளமாக அது இருக்கலாம்.

முதலில் கொஞ்சம் அருகில் இருந்து பார்த்துவிட்டு அதன் பின் ஒரு பத்தடி தூரம் பின்னால் நகர்ந்து போய் நின்று மீண்டும் பாருங்கள் முதலில் பார்த்தபோது சுவரில் ஒரு சிறு பகுதி ஒளி வட்டமாகத் தெரியும். பின்னால் போய் நின்று பார்த்த போது அதிகமான சுவர் பரப்பு தெரியும். ஆனால் வெளிச்சம் குறைவாக இருக்கும். உண்மையில் இந்த ஒளி பரப்பு சுவர் பரப்பு அதிகரிப்பதை சரிக்கட்டுகிறது.

வானத்தில் நட்சத்திரம் பல்வேறு தூரங்களில் சிதறிக் கிடக்கின்றது. நட்சத்திரம், வாயு, துகள் எல்லாம் சேர்ந்த உடுமண்டலங்கள் ஒரே சீராக வானில் பரவியுள்ளன. ஒளி மண்டலங்கள் ஒரே நிலையில் இருப்பதில்லை. நம்மிடமிருந்து விலகிப் போகின்றன. "உடுமண்டலங்களின் பின் தங்குதல்" என்பது இதன் பெயர்.

எட்வின் ஹப்பில் என்ற வானியல் வல்நனர்தான் இதைக் கண்டுபிடித்து உலகிற்கு எடுத்துச் சொன்னார். உடுமண்டலங்களிலிருந்து வெளிவரும் ஒளியின் அலை நீளம் அதிகரித்து அவை சிவப்பு நிறத்தை அடைந்து விடுகின்றன. மேலும் அவை பின்நோக்கி விலகுவதனால் அதிலிருந்து நம்மிடம் வந்து சேரும் ஒளி ஆற்றல் மிகவும் குறைந்து விடுகின்றன.

அத்துடன், ஒரு விண் மீனிலிருந்து வெளிவரும் ஒளிக் கோள வளைவில் அதற்கு முன்னால் உள்ள விண்மீன்களால் தடுக்கப்பட்டு ஓரளவுக்கு உறிஞ்சப்பட்டுவிடும். உண்மையில் இந்த உடுமண்டலங்களின் பின் தங்குதல் விளைவுகளால் நீண்டதூரத்தில் உள்ள நட்சத்திரத்தின் ஒளி பூமிக்கு கொஞ்சம் கூட வந்து சேருவதில்லை.

ஆகாயகங்கை என்று சொல்கிறோமே அந்த உடுமண்டலத்தின் மையப் பகுதி மிக வெளிச்சமாக உள்ளது. ஆனால் அதைச் சுற்றி உள்ள துசுப்படலம் அதை மறைத்துவிடுகிறது. அதனால் அந்த வெளிச்சமும் குறைந்துவிடும்.

இரவு இருட்டாக இருப்பதற்கு இவைதான் காரணம். இது தெரியாத நமது ஆள் இருட்டில் எதையோ தேடிக் கொண்டிருந்தார். அவரிடம் போய் "என்ன சார்? இந்த இருட்டில் நீண்டநேரமாக என்ன தேடுகிறீர்கள்?" என்று கேட்டார் ஒருவர். "வெளிச்சத்தை தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பலதரப்பட்ட உதவித்திட்டங்கள்

## ஜனாதிபதி உறுதிமொழி



(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பேருவலப் பகுதிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

அங்கு அமைக்கப்பட்டு இருந்த மூன்று நலன்புரி நிலையங்களுக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்வையிட்டதுடன், சுனாமி பாதிப்புக்கள் குறித்தும் நிவாரண விநியோகம் குறித்தும் மக்களுடன் கலந்துரையாடினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தொலைவிற்கு அப்பால் மாற்று இடங்கள் அமைத்துத் தரப்படும் என்றும் அவர் அப்பகுதி மக்களிடம் தெரிவித்தார்.

அத்துடன் மக்கள்வங்கி, இலங்கைவங்கி ஊடாக இலகுக் கடன்கள் வழங்கப்படும். இந்தக் கடன்கள் ஒருவருட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். கடன்கள் யாவும் விண்ணப்பித்து மூன்று நாட்களுக்குள் வழங்கப்படும்.

மற்றும் மூன்று மாத காலத்திற்குள் மீன்பிடிப் படகுகள் வீடுகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அம் மக்களுக்கு ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதேவேளை, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஏற்றவகையில் இலவச போக்குவரத்து வசதிகளை செய்து கொடுக்குமாறு போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ரோஹித்த அபயகுணவர்த்தனவிற்கு ஜனாதிபதி பணித்துள்ளார். (ற)

# மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பிரதமர் தலைமையில் விஷேட செயற்றிட்டம்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் உள்ள பாதிக்கப்பட்ட மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் விஷேடதிட்டம் ஒன்று அமுல்செய்யப்படவுள்ளது.

கடற்தொழில் அமைச்சின் உதவியுடன் அம்பாந்தோட்டை சுனாமி நிவாரண மற்றும் புனரமைப்புத் திட்டத்தினால் இவ் விஷேட நிகழ்ச்சித் திட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அம்பாந்தோட்டை மாவட்ட சகல கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அம்பாந்தோட்டை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்தனர். மீன்பிடித்துறைகளிலும் கடற்படிகைகளிலும் நிறைந்து இருக்கும் குப்பை கூழங்கள் வலைகளில் சிக்குவதினாலும் மீன்பிடிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக மேற்படி கலந்துரையாடலில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இதற்கமையவே இந்தத் திட்டத்திற்கு உதவுமாறு பிரதமர் அலுவலகம் தொண்டு அடிப்படையிலானசுழியோடிகளையும் அமைப்புக்களையும் கேட்டுள்ளது.(ற)

# சுனாமியால் சேதமடைந்த 18 பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்ப 3484.3 மில்லியன் அமெ.டொலர் தேவை

## மதிப்பீட்டு அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுனாமியால் சேதமாக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தின்கீழ் 18 பிரதேசங்களுக்கு 3484.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அரசாங்கத்திற்கு செலவு ஏற்படுமென மதிப்பீட்டு அறிக்கையொன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி, ரயில் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நீர்வழங்கல், துறைமுக அபிவிருத்தி, மின்சாரம்,கல்வி, சுகாதாரம், சமூக சேவை, வீடமைப்பு, மீன்பிடி, உல்லாசப் பிரயாணம், கைத்தொழில் அபிவிருத்தி, சூழல் அபி விருத்தி, சட்டம் மற்றும் நீதி போன்ற அனைத்து வசதி களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படல் வேண் டும் எனக் கூறப்பட்டுள்ளது.

8இலட்சம் பேர் வீடமைப்புத் தேவையை எதிர்நோக்கியுள்ளனர். 4இலட்சம் பேர் எந்தவித வருமானமும் இன்றியுள்ளனர். நிரந்தரமாகவே உதவி தொடர்ந்தும் தேவைப்படுபவர்கள் 55ஆயிரம் பேர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பட்டினியைப் போக்கும் திட்டத்திற்கு 85-100 மில்லியன் அமெரிக்க டொலர்களும் உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திக்கு 128 மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் மீன்பிடி அபிவிருத்திக்கு 330.49 மில்லியன் அமெரிக்க டொலர்களும் சூழல் அபிவிருத்திக்கு 74.95 மில்லியன் அமெரிக்க டொலர்களும் சட்ட அமுலாக்கலுக்கு 45.1 மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டது. (ற-6)

# மீன்களின் வயிற்றில் இரும்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கடல் மீன்களின் வயிற்றில் இரும்புப் பொருட்கள் இருப்பதாகவும் இதனால் மீன் சாப்பிடும் மக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுவது குறித்து றுகுணு பல்கலைக்கழக நீரியல் வள ஆய்வுப் பிரிவு பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

தென் பகுதியிலுள்ள பல்வேறு கடல் பகுதிகளில் பிடிக்கப்பட்ட மீன்களின் ஈரல் அடங்கலான பாகங்கள் மேலதிக ஆய்வுக்காக பிரான்ஸ் மொன்ஜேலிய பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்பினால் தென்பகுதி கடல் வளத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து பல்கலைக்கழக நீரியல்வள ஆய்வுப்பிரிவு பொறுப்பாளர் ருசிரா குமாரதுங்க தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. (க-9)

# சுனாமி வந்து விட்டதாக அஞ்சி மதிலேறிக் குதித்த மாணவி காலில் படுகாயமடைந்தார்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் சுனாமிப் பேரலை ஏற்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் காலை பரவிய வதந்தியால் அச்சம்கொண்ட பாடசாலை மாணவி ஒருவர் மதிலால் ஏறிக் குதித்ததில் காலில் படுகாயமடைந்துள்ளார். பருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் உயர் தரக் கல்லூரியைச் சேர்ந்த சண்முகராசா கோ குலவேணி (வயது-13) என்ற மாணவியே இவ் வாறு கால் முறிந்த நிலையில் மந்திகை வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுனாமிப் பேரலை ஏற்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் சில விசமிகளால் பரப்பப்பட்ட பொய் வதந்தியால் நேற்று வடமராட்சியில் உள்ள கரையோரப் பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே. (க-35,52)

# நிவாரணங்களா? கடன் சலுகைகளா?

## பாதிப்புற்ற நாடுகளிடம் அமெரிக்கா கேள்வி

(நியூயோர்க்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிவாரணமா? அல்லது நீண்டகால கடன் சலுகைகளா? வேண்டும் என்பதை அந்நாடுகள் முடிவு செய்ய வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.


கடன் சலுகை அல்லது நிவாரணம் இதில் எது வேண்டும்? என்பதை இந்நாடுகள் முடிவுசெய்யவேண்டும் என இராஜாங்க கனிஷ்ட அமைச்சர் அலான் லார்ஸன் கூறினார். சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஒரு பில்லியன் டொலர்களை ஒதுக்குவதற்கு ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அங்கீகாரத்தை எதிர்பார்த்துள்ளார்.

லார்ஸன் குறிப்பிடும் உதிரிகள் என்பது இந்த ஒரு பில்லியன் டொலர்களையும் உள்ளடக்கியதா? எனத் தெரியவில்லை. பாரிஸ் கடிக நாடுகளால் வழங்கப்பட்ட குறுகியகால கடன் சலுகைகளை அனுபவிக்கும் நாடுகள் மேலே கூறப்பட்ட நிபந்தனைக்கு உட்படவில்லை. கடன் திருப்பிச் செலுத்துவதை தற்போதைக்கு இடைநிறுத்தி வைப்பதை சிறப்பான உதவியெனக் கூறமுடியாது எனசில நாடுகள் தெரிவித்துள்ளன. (க-9)

# ஏழைகளை நேசிப்பவர்கள் இறைவனின் ஆசிபெறுவர்

## பரமபிதா காட்டிய பாதை

இறைவன் மனிதனை பலதரப்பட்ட நிலைகளில் படைக்கவில்லை. மனிதனே மனிதனை பலதரப்பட்ட



நிலையினர்களாகக் கணித்துவிட்டான். பணக்காரன், ஏழை, இலட்சாதிபதி, கோடீஸ்வரன் என்ற நிலைகள் பணத்தை மையமாக வைத்தே உருவாகின. பணம் படைத்தவர்கள் பலதரப்பட்ட சுக போகங்களை அனுபவிக்க ஏழையர்கள உண்ண உணவற்று, இருக்க இல்லிடமற்று, உடுக்க நல்ல உடையற்று, பணமற்று, தொழில் துறைகளற்று, கடவுளையே தமது பெருஞ் சொத்தாகக் கொண்டவர்கள் இந்த ஏழை எளிய மக்கள் மேலே இயேசுவும் மனமிரங்கினார். அவர்களைக் குறித்து விண்ணரசு அவர்களுக்கு உரிமையானது. நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுபவர்களும் ஏழைகளாகவே இருப்பதால் அவர்களுக்கும் விண்ணரசு உரித்துடையது என்று இயேசு போதித்தார்.

### ஏழைகளுக்கே நற்செய்தி

அக்காலத்தில் வாழ்ந்த யூதர்கள் ஏழை எளியவர்களை வெறுத்தார்கள். அவர்கள் கடவுளின் சாபத்தின் நிமித்தம் இப்படியான நிலைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் என்று அருவருத்தார்கள். புறம்பே ஒதுக்கிவைத்தார்கள். ஆனால் இறைமகன் இயேசு பிறந்த பொழுதும் ஏழை இடையர்களுக்கே அவரின் பிறப்பு முதன் முதலில் அறிவிக்கப்பட்டது. இயேசுவும் ஏழ்மையின் வடிவிலே தொழுவத்தில் பிறந்து ஏழைத் தச்சுத் தொழில் செய்த தகப்பன் சூசையின் பாதுகாப்பிலே வளர்க்கப்பட்டவர். இறுதிவரை ஏழ்மையிலே வாழ்ந்தவர். அவர் தமது பணியைத் தொடர்ந்து செய்வதற்கு வசதிபடைத்தவர்களைத் தேடிச் சேர்க்கவில்லை. சாதாரண கல்வியறிவில் குறைந்த கடலில் மீன் பிடித்தொழில் செய்தவர்களையே சீடர்களாக்கினார். பின்னர் நற்செய்திப் பணியாகிய அப்போஸ்தவப் பணிக்கு அனுப்பிவைத்தார். ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் சென்று நோய் பிணிகளைக் குணமாக்கி, பேய்களை ஓடச்செய்து, சென்ற இடங்களில் எல்லாம் நன்மையே செய்துவந்தார்.

### ஏழைகளுக்கு குரல் கொடுக்கும் திருச்சபை

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்பது போல இயேசுவுக்குப் பின்னும் திருச்சபையின் பணியும் ஏழைகள் பக்கமே இருந்துவந்தது. அதனாலேயே திருச்சபை இலகுவாக உலகெங்கும் பரவ வாய்பாகவும் இருந்தது. பணம் படைத்தவர்கள் பலவகைத் தேவைகளை நிறைவுசெய்ய கண்ணும் கருத்துமாக இருக்க ஏழைகள் இறைவனைத் தேடுவதிலே விசுவாசமும் பக்தியும் உடையவர்களாகவும் இருந்துவருகிறார்கள். இதனால்தானே அன்றோ இயேசு குறிப்பிட்டார் 'பணக்காரன் விண்ணரசில் நுழைவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது' என்றார். இன்னும் உலகத்தில் ஏழைகள் அதிகம் இருப்பதினாலே தானே இறைவன் இன்னும் உலகின்மேல் அன்பு செலுத்திக் கொண்டு இருக்கிறார். இதிலிருந்து நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளும் பாடம் இறைவனின் ஆசியைப் பெறவேண்டுமென்றால் ஏழைகளை நேசிக்கவேண்டும்.

### இறைவார்த்தையின் குரலுக்கு செவிமடுப்போம்

இனறு உலகெங்கிலும் கொடுங்கோன்மையான செயல்கள் நிறைந்து காணப்படுகின்றன. எங்கும் எதிலும், பொய்யும் புரட்டும் அநீதியும் ஆணவமும் அக்கிரமமும் அடக்கு முறைகளும் வன்செயல்களும் தலைவிரித்து தாண்டவமாடுகின்றது. வலியவர் மெலியவரை அடக்கி ஒடுக்குகின்றார்கள். ஏழைகள் துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். 'நீதிமான்களையல்ல பாவிகளையே' அழைக்க வந்தேன் என்று இயேசு கூறினார். ஏழை எளியவரை எத்தனை பேர் மதிக்கின்றோம். அவர்களை ஆதரிக்கின்றோம். அன்பு காட்டுகின்றோம். ஒன்றுமில்லாதவர்களை உங்கள் விருந்துக்கு அழையுங்கள் என்ற இறைவனின் வார்த்தைக்கு எத்தனைபேர் செவிசாய்க்கின்றோம். எல்லாம் வெளிவேடம், பகட்டும் ஆடமபரமும், பெருமையும் இவை ஒன்றும் எம்முடன் கூடவரப் போவதில்லை. எமது நன்மை தீமைகளே இறுதிநாளில் எம்முடன் கூடவரப் போகின்றன. இதனை உணர்ந்தவர்களாக பகிர்தலின் மூலமாக இயேசுவைக் கண்டு கொள்வோம். அவரின் மதுர வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுப்போம். மனித மான்மை மதிப்போம். புனித வாழ்வுக்கு எம்பாதங்களைப் பதிப்போம. ஆண்டவனின் கரங்கள் எம்மை அரவணைக்கும். □

**அன்ரனி பீற்றர்**

# இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு இந்தியாவின் திருவையாற்றில் நடைபெறவுள்ள தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனையில், யாழ்.பல்கலைக் கழக இசை விரிவுரையாளர் நா.வி.மு.நவரெத்தினம் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். (ற)

# பயிற்சி நெறிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிக் கருத்தரங்கு எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணி வரை யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் அறநெறிப் போதனைக்கான விசேட நடைமுறைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அறநெறிப் பாடசாலையில் ஆசிரியர்களாகக் கற்பிக்கும் ஆசிரியர்களும் புதிதாக அறநெறிப் போதனைகளைக் கற்பிக்க விரும்பும் ஆசிரியர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றலாம்.

பயிற்சியின் முடிவில் 'அறநெறிக்குரு' என்ற பட்டம வழங்கி சான்றிதழ் வழங்கப்படும்.

இக்கருத்தரங்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உதவி அதிபர் சொஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் மற்றும் யாழ்.கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன் மற்றும சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன், ஆன்மீகத் தலைவர் கலாநிதி அடியார் விபுலானந்தா ஆகியோர் விரிவுரையாற்றவுள்ளார்கள்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்கு நண்பகல் மதிய போசனமும் வழங்கப்படவுள்ளது.

(க-9)

# சுனாமிப் பேரலையினால் பாதிப்புற்று இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் சேவைக்குக் கூடுதலான நாளாந்தபடி

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள சுமார் 4 இலட்சம் தொழிலாளர்களிடம் இருந்து பெறும் சேவைக்கு நாளாந்தப் படியாக 400 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை வழங்குவதற்கு சர்வதேச தொழில் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தூதுக்குழு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் நேற்று சந்தித்த போது இதனைத் தெரிவித்தது.

சுனாமிப் பேரலை அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து வேலை வாய்ப்பு இன்றி இருப்போரின் சேவையே இந்தத் திட்டத்திற்குப் பெறப்படும்.

குறுகிய மற்றும் நீண்டகால அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இவர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்படும்.

இந்தத் தொழிலாளர்கள் நிரந்தர தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் வரை இந்தத்திட்டம் செயற்படுத்தப்படும்.

பிரதமர் இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செய்த பணிப்புரையில் இதன் முன்னோடித் திட்டமாக வீதி அபிவிருத்தித்திட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு கேட்டுள்ளார்.

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்களின் குடும்பத்தவர்கள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவர்களுக்கான நிவாரணத்திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்புட்டது.

(க-60)

# அரசியல் ஒற்றுமை குறித்து ரணில் தொடர்ந்தும் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டில் சட்டத்தையும், சமாதானத்தையும், பாதுகாக்கவும் இணக்கப்பாட்டுடன் கூடிய அரசியல் ஒன்று அத்தியாவசியமானது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம், சட்டம், சமாதானம் மற்றும் திறந்த பொருளாதாரம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு அடிப்படை கொ[illegible]யொன்றை ஏற்படுத்த வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நேற்றுமுன் தினம் மாலை கொழும்பு புதிய நகர மண்டபத்தில நடைபெற்ற கூட்டமொன்றி லேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின்



தே[illegible]ய நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்யும் முகமாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டம், தேர்தல் கொள்கை அல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் வலியுறுத்தினார்.

(க-9)

# சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட மரங்கள் பொலிஸாரிடம் சிக்கியது

காரைநகரில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட பல ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்களை காரைநகர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கைப்பற்றி காரைநகர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது காரைநகர் தென்மேற்கு கிராமசேவையாளர் பிரிவிலிருந்து கடந்த 26 ஆம் திகதி எவ்வித அனுமதியும் இன்றி மரங்கள் தறிக்கப்பட்டு லொறி மூலம் ஏற்றப்பட்டன.

காரைநகருக்கு வெளியே இம்மரங்கள் கொண்டு செல்லப்பட்ட வேளை காரைநகர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பொன்னாலையில் நிறுத்தி விசாரணை செய்த போது எதுவித அனுமதியும் பெறப்படாமல் ஏற்றியமை தெரியவந்தது.

இதனையடுத்து இது குறித்து பொன்னாலைப் பொலிஸாருக்கு முறையிடப்பட்டதுடன சம்பந்தப்பட்ட லொறி காரைநகர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

மேற்குறித்த மரம் ஏற்றியமைக்கு காரைநகர் பிரதேச செயலக பிரிவு கிராம சேவையாளரிடமோ, அல்லது ஏனைய அதிகாரிகளிடமோ அனுமதி எதுவும் இல்லாத போதும் யாழ்ப்பாண மரக் கூட்டுத்தாபன முத்திரை பொறிக்கப்பட்ட அனுமதிபபத்திரம் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களைத் தடுத்துவைத்து விசாரணை செய்த காரைநகர் பொலிஸார் மேலதிக விசாரணைக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காரைநகர் கிராம சேவையாளர்கள் உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி மரங்கள் ஏற்றுவதற்கு யாழ்ப்பாண மரக் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ள அதேவேளை, மேற்படி கடத்தல்கள் கடந்த வாரத்தில் இருந்து இரவுபகலாக பெருமளவு நடைபெறுகின்றது என்றும் இதற்கு பலதரப்பட்ட அனுசரணைகளுடன் நடைபெற்று வருவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(க-246)

# கொட்டகைகள் அமைக்கப்படுகின்றன

சுனாமியினரல் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு மாற்று இருப்பிட வசதிக்காக கொட்டகைகள் அமைக்கும் பணிகள் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐ.நா.வின் அகதிகளுககான உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் மணற்காட்டுச் சந்தைப் பகுதியில் இக்கொட்டகைகள் அமைக்கப்படுகின்றன. குடத்தனை, வரணி, புலோலி ஆகிய இடங்களில் உள்ள பாட சாலைகளில் தங்கியுள்ள 213 குடும்பங்கள் இந்தக் கொட்டகைகளில் தங்கவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# மாத்தறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)


இருபத்தியோராம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப மாத்தறை நகரை நவீன மயப்படுத்தப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப கிராமம் சர்வதேச விளையாட்டு அரங்கு நில்வள ஆற்றுக்கு குறுக்கே புதிய பாலம், பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம், புதிய நகர சபை மண்டபம் கலாநிதியம் ஆகியன மாத்தறையில் நிறுவப் படவுள்ளன.

இந்தப் புதிய திட்டத்திற்கு ஜப்பானிடம் இருந்து நிதி உதவிகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

மாத்தறையை நவீனமயப் படுத்தும் வேலைத்திட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்த கொள்ளவுள்ளதுடன், அமைச்சர்கள் மங்கள சமரவீர தினேஷ் குணவர்த்தன பேரியல் அஷ்ரப் ஆகியோருடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)



'சந்திரமுகி'
ரஜினி, நயன்தாரா

## காதல் நாயகியை பாராட்டிய பாலசந்தர்



பத்தாம் வகுப்புத்தான் படித்திருக்கிறாராம் சந்தியா! ஆனால முதல் படமான 'காதலில்' அவரின நடிப்பு, பிஎச்டி லெவலுக்கு பேசபபட்டிருக்கிறது. வீடு கொள்ளாமல் பொக்கேயும், டயரி கொள்ளாமல் கால்ஷீட்டுமாக ஜமாய்த்துக் கொண்டிருக்கிற சந்தியாவுக்கு சமீபத்திய ஆச்சர்யம் பாலசந்தர்தான்!

கமலின் படங்களைப் பார்த்துவிட்டு பிரமித்துப்போனாலே, கடிதம்மூலம் வாழ்த்துகிற பாலசந்தர்,

சென்னை வடபழனியில் இருக்கும் சந்தியாவின் வீட்டுக்கு நேரடியாகவே சென்றுவிட்டாராம்.


சந்தியாவின் நடிப்பை வியந்து பாராட்டியவர் 'நீ சரிதா மாதிரி நடிச்சிருக்கே' என்று சொல்ல ஆஸ்கார் விருதே கிடைத்தது போல் ஆனந்த 'அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறார் சந்தியா!

## தேவதையைச்...

திரை...


லோ கிளாஸ் தனு...க்கு, ...
மேல் காதல்! பதிலுக்கு அவரும் ...
மாக பயணிக்கிறது காதல் ரயில்! ...
பட்ட பாறாங்கல்லாக இடையிலே ...
டாக்டரான இவர் ஸ்ரீதேவியின்...
பார்க்க, கூடவே காதல் ஜுரம் பற்றி...
ரீ விற்கிற தனுஷா? டீசண்டான குணா...
இல்லாமலே பட்டிமன்றம் நடத்துகி...
கட்சிமாறி குணாலைக் கொஞ்ச அ...
இதெல்லாம் தெரியாமல் ஸ்ரீதே...
என்று ஐயப்பன் கோவிலுக்குப் போய்...
ஸ்ரீதேவி கொடுக்கிற பிரசாதம் 'செரு...
சுடு சொல்தான்! காலைப் பிடிக்கிறார்...
தண்ணியடிக்கிறார்... தடுமாறி விழுகிற...
கெஞ்சல்களையும் அலட்சியப்படுத்தி...
சலைத் தொடர்கிறார் ஸ்ரீதேவி! வெறுத்...
டம் போய், காதலி ஏமாற்றிவிட்டாள் என...
இ.பி.கோவையே இழிவுபடுத்...விட்ட ம...

தேவ...





## தமிழ் படத்தை இயக்கும் பிரபுதேவா



'டைரக்டர் ஆகனும்கிறது என்னுடைய நண்ட நாள் ஆசை. அதுக்காக பயிற்சி எதுவும் எடுத்துககல. டான்ஸ் மாஸ்டரா இருந்தப்ப நிறைய கத்துக்கிட்டேன். டான்ஸ் சொல்லிக் கொடுக்கும் போதே காட்சிகளை பிரிப்பது, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது என்றெல்லாம் பாதி டைரக்டர் வேலை பாத்திருக்கேன்.

டைரக்ட் பண்ண வாய்ப்புத் தேடியபோது தெலுங்கில் கிடைத்தது. ஊண் உறக்கம் இல்லாமல் உழைச்சு இந்தப் படத்தை எடுக்கிறேன். ரசிகர்கள்தான் பார்த்துட்டு எப்படி இருக்குன்னு சொல்லனும். இது காதல் கதை.

லண்டனில் வசிக்கும் சித்தார்த் ஒரு கல்யாணத்துல கலந்துக்க ஆந்திரா வர்றார். அங்கு த்ரிஷாவைப் பார்த்துக் காத்ல் வருது. இதுதான் கதை. அடுத்து தமிழில் ஒரு படம் டைரக்ட் செய்ய முடிவுபண்ணியிருக்கேன்' என்றார் பிரபுதேவா.



ஜி
அஜீத்-த்ரிஷா

## சினிமாச் சிதறல்

### அழகானவள் – கவர்ச்சியானவள்

நண்பனால் ஏமாற்றப்பட்டு கஷ்டப்படுகிறான் ஒருவன். அவனுக்கு உதவப்போய் தானும் கஷ்டத்தில் சிக்குண்டு தவிக்கிறான் நாயகன். இந்த சுவாரஸ்யங்களை வைத்து மென்மையான காதலையும் சேர்த்து சொல்லும் படம் 'அழகானவள்'. இந்தப் படத்தில் பாண்டியராஜன், நந்திதா நடிக்கிறார்கள்.

ஒளிப்பதிவாளர் ஆர்.எச்.அசோக் இந்தப் படத்தை இயக்குகிறார். படம் ஆரம்பிக்கும்போதே நந்திதாவிடம் படத்துக்குப் பெயர் 'அழகானவள்' ஆனாலும், படத்தில் நீங்கள் கவர்ச்சியானவராக வரவேண்டும். அப்போதுதான் நாங்கள் பிழைக்க முடியும் எனச் சொல்லிவிட்டார்களாம். நந்திதாவும ஸ்பெஷலாய் கருணை காட்டி கவர்ச்சியை வாரி வழங்கியிருக்கிறாராம்.

ஒருவழியாக கோர்ட்டுக்கு வருகிற த...
கும் உள்ள காதலை வெளிச்சம்போட்...
இவனுக்கு இத்தனை காதலா? என்று ...
மாறும் ஸ்ரீதேவி, "நான் உன்னையே க...
என்று இறங்கிவர, தனுஷ் என்ன செ...
இயக்குனர் பூபதிபாண்டியன் நிமி...
வெடியைக் கொளுத்திப் போடுகிறார். ...
'உள்'கட்டமைப்பு! பெல்ட் போடக்கூட...
பெலடுக்குப் பதிலாக கயிறைக் கட்டிக்...
ளைச் சைட் அடிக்கும் நேரத்தில் இவ...
அவிழ்த்து விடுவது காமெடி...
இன்னொரு பக்கம் க...னாஸ்! ...
புரம் நாய்க்கு கிடைக்கணும்னு விதி ...
லைன்னா பக்கத்துக் கடை பொரி ச...
திடீர் ஞானியாக கருணாஸ் உதிர்க்கிற ...
ஆகிறார்கள் ரசிகர்கள்! பொலிஸ் ஸ்...
பின், மனமிரங்கும் இன்ஸ்பெக்டர் 'ஏ...
சாபபிடுறீங்களா?' என்று கேட்க 'ப்ரு காப்...
கைதட்டலில் தள்ளாடுகிறது தியேட்...
கடைசி அரைமணி நேரம்தான் ப...
சொல்லப்படுகிறது.
ஸ்ரீதேவி - பல காட்சிகளில் தே...
துர்தேவதை!
ஒரே காட்சியில் விதவிதமாகத் ...
இடைவெளிக்குப் பிறகு கோர்ட்டில் ...
அந்தக் காட்சியில் புருவம்கூட நடித்...
பின்னணி இசையைப் பொறுத்தவ...
குத்தான் கொண்டாட்டம். இரண்டு பே...
போனாலும் கனவு கண்டாலும், கண்ணை...
பார்ட்டிகள் ஹோவென்று பாடுகிறார்கள்...
'அழகே பிரம்மனிடம்...' பாடல் இனிமை...
'துண்ட காணோம்...' பாடலுக்கு வின...
படம் முழுக்க தேவதை! கடைசி சில நிமி...

## ...யைக் கண்டேன்

### திரை விமர்சனம்

...னுஷுக்கு, ...ஹை கிளாஸ் ஸ்ரீதேவி
அவரும் பச்சைக்கொடி காட்ட, சுக
...ல் ரயில்! தண்டவாளத்தில் வைக்கப்
...டையிலே வருகிறார் குணால்!
ஸ்ரீதேவியின் ஜுரத்திற்கு வைத்தியம்
...ஜுரம் பற்றிக்கொள்கிறது குணாலுக்கு.
...டான குணாலா? மனசுக்குள் பாப்பையா
நடத்துகிற ஸ்ரீதேவி, படக்கென்று
...கொஞ்ச ஆரம்பித்துவிடுகிறார்.
...ாமல் ஸ்ரீதேவி குணமாக வேண்டும்
...க்குப் போய்விட்டு வரும் தனுஷுக்கு,
...தம் 'செருப்பால் அடிப்பேன்' என்கிற
பிடிக்கிறார்... கண்ணீர் வடிக்கிறார்...
...றி விழுகிறார்... தனுஷின் சகலகலா
...ியப்படுத்திவிட்டு குணாலுடன் கொஞ்
...வி! வெறுத்துப்போன தனுஷ் பொலிசி
...விட்டாள் எனறு கம்பளைண்ட் கொடுக்க,
...த்...விட்ட மர...ி புரட்டி எடுகிறார்கள்.

'தேவதையைக் கண்டேன்'
தனுஷ், ஸ்ரீதேவி



...வருகிற தனுஷ், தனக்கும் ஸ்ரீதேவிக்
...ரிச்சம்போட்டுக் காட்டுகிறார். தன்மேல்
...லா? என்று கடைசி நேரத்தில் மனம்
...ன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன்"
என்ன செய்தார் என்பது முடிவு!
...ன்டியன் நிமிடத்திற்கொரு நகைச்சுவை
...போடுகிறார். குறிப்பாக மயில்சாமியின்
போடக்கூட வசதியில்லாத மயில்,
...றக் கட்டிக்கொள்கிறார். அவர் பெண்க
...ரத்தில் இவரின் ஜீன்ஸை நண்பர்கள்
...டி
க...ாஸ்! '...ர் பிரியாணி, விழுப்
...ன்னு விதி இருந்தா கிடைக்கும். இல
பொரி கூட கிடைக்காது' இப்படி
உதிர்க்கிற தத்துவங்களில் தவிடுபொடி
...ாலிஸ் ஸ்டேஷனில் நையப்புடைத்த
...பெக்டர் 'ஏதாவது சாப்பிடுங்கடா! ரீ
...க 'ப்ரு காப்பி' என்கிறாரே கரணாஸ்...
...து தியேட்டர்!
...நரம்தான் படத்தின் முக்கிய கருத்து

...சிகளில் தேவதை! சில காட்சிகளில்

...விதமாகத் தெரிகிறார் தனுஷ். நீண்ட
...கோர்ட்டில் காதலியைப் பார்க்கிற
...ம்கூட நடித்திருக்கிறது தனுஷுக்கு!
பொறுத்தவரை கோரஸ் பார்ட்டிகளுக்
...இரண்டு பேர் சந்தித்தாலும், பிரிந்த
...லும், கண்ணை விழித்தாலும் கோரஸ்
...பாடுகிறார்கள். தேவாவின் இசையில்
...ல் இனிமை. மும்தாஜ் ஆட்டத்தில்
...லுக்கு விசைத்தறியின் வேகம்!
...டைசி சில நிமிடங்களில் மட்டும் 'வதை'

---


டைரக்டர் பி.கே. மோகன் 'சுனாமி' என்ற பெயரில் ஒரு படத்தை இயக்கி தயாரிக்கிறார்.

* * *

'ஆசை ஆசையாய்' பட்த்தின் டைரக்டர் ரவி மௌரியாவின் அடுத்த படம் "ஆரம்பப் பள்ளி'

* * *

**கே.பாக்கியராஜ் தன மகன் சாந்தனுவை ஹீரோவாக வைத்து இயக்கும் படத்திறகுத் தீவிரமாகக் கதை விவாதத்தில் ஈடு பட்டிருக்கிறார். இதற்காக அவரு டைய பழைய அசிஸ் டெண்டுகளையெல்லாம் சென்னைக்கு வர அழைத்து ஸடோரி டிஸ்கஷன் நடத தகொண்டிருக் கிறாராம்.**




### ஏறும் சம்பளம்

'ஷா'நடிகை அதிக சம்பள ஆசையால் தெலுங்குக்குப் போனோர். அங்கு தனது சம்பளத்தை ரூ.85லட்சமாக உயர்த்தி இருக்கிறார்.

* * *

**தமிழுக்கு இறக்குமதியான தாச நடிகை தனது சம்பளத்தொகையை ரூ.35 லட்சத் துக்கு ஏற்ற முடிவு செய்துள்ளாராம்.**

* * *

'அந்நியனில்' இருபது வேடங்களில் நடிக்கிறாராம் விக்ரம். படத்தில் மொத்தம் 12 வில்லன்களாம்! படப் பிடிப்பு முழுவதும் மூடிந்து விட்டதாம்.

## நிருபர் கேள்வியும் விஜய் எரிச்சலும்

'அட்டகாசத்தில்' அஜீத் கொடுத்த அட்டாக்கிற்கு, 'திருப்பாச்சி'யில் வெடித்திருக்கிறார் விஜய்!


'டேய்... என்னடா தல? கழுத்திலே தலையே இருக்காது...' இப்படி போகிற வசன மழையில் ஒரே எரிமலையின் சூடு!

இது சம்பந்தமாக விஜயைப் பேட்டியெடுக்கப் போனாா பிரபல தமிழ் நாளிதழ் ஒன்றின் நிருபர்.

இப்படி மாத்தி மாத்தி சண்டை போட்டுக்கிறீங்களே... என்று நிருபர் கேட்க,

நான் எங்கே சண்டை போட்டேன் என்றாராம் விஜய். மேற் படி வசனத்தைச் சுட்டிக்காட்டினாராம் நிருபர். சட்டென்று கொதி த்த விஜய், நிருபரை ஒருமையில் திட்டி, அவர் கேட்ட கேள்விகளுக்கு ஒரு வரியில் பதில் சொல்ல,

நிருபரும் விடாமல் நீங்கள் ரஜினி சாயலில் நடிக்க ஆரம் பித்துவிட்டீர்களே என்று கேட்க, சட்டென்று எழுந்துகொண்ட விஜய, ஒரு விரலை நீட்டி நிருபரை எச்சரித்துவிட்டு, வீட்டுக்குள் போய் விட்டாராம். காத்திருந்த நிருபர் வெகுநேரம் ஆகியும் விஜய்



வராததால், பேட்டியை அரைகுறையாக முடித்துக்கொண்டு கிளம் பினாராம்.

பின்னர் விஜய் ஒருமையில் திட்டியதை அப்படியே பத்திரிகை யல் வெளியட, விஜய் தரபபலிருந்து பேசிய சிலர், சார்தான் கோபப் பட்டார்னா, அதை அப்படியே பத்திரிகையில் போடுறதா என்றார்களாம்!

## 'கஜினி'

'தீனா', 'ரமணா' ஆகிய மாபெரும் வெற்றிப் படங்களை இயக்கி, தமிழ் திரையுலகில் பரபரப்பாகப் பேசப்பட்டவர் இயக்குனர் ஏ.ஆர்.முருக தாஸ்.

இவர் இயக்கும் புதிய படத்தில் சூர்யா கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்திற்கு 'கஜினி' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விஸ்வரூபம் எடுத்திருக் கும் சூர்யா – முருகதாஸ் இணைவதால் இந்தப் படததிற்கு மாபெரும் வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது. மிகப் பிரமாண்டமாக உருவாகும் இந்தப் படத்தை 'சுள்ளான்' படத்தை தயாரித்த சேலம் ஏ.சந்திரசேகரன் தயாரிக் கிறார். மிக வித்தியாசமான திரைக்கதை உத்தியுடன் உருவாகியுள்ள இந்த அதிரடி அக்ஷன் கதையில் தமிழ் சினிமாவில் இதுரை எந்த ஹீரோவும் ஏற்றிராத ஒரு மாறுபட்ட பாத்திரத்தில் சூர்யா நடிக்கிறார்.

இந்த சவாலான பாத்திரம் தமிழ் திரையுலகிற்கு முற்றிலும் புதிது. சூர்யாவுக்கு ஜோடியாக 'குமரன் சன் ஆப் மகாலட்சுமி' படத்தின் கதா நாயகி அசின் நடிக்கிறார். வில்லனாக பிரகாஷ்ராஜ் நடிக்க மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இந்த அதிரடி அக்ஷன் கதையில், பல புதுமையான தொழில்நுட் பங்களையும் பயன்படுத்துகிறார் முருகதாஸ். இசை ஹாரிஸ் ஜெயராஜ்.



'தகதிமிதா'
யுவகிருஷ்ணா, அங்கீதா

# கல்வி முகாமைத்துவத்தில் செயல்நிலை ஆய்வுகள்

(1)

## அறிமுகம்:

அறிவைத்தேடி உண்மையைக் கண்டறியும் செயலாற்றுகையாக ஆய்வியல் உள்ளது. ஆய்வியல் வரலாற்று வளர்ச்சியில் மெய்யியலாளர்களின் பங்குகள் முதன்மை பெறுகின்றன. தொடர்ந்து விஞ்ஞானரீரியாக ஆய்வுகள் அபிவருத்திநோக்கி முன்னெடுக்கப்பட்டன.

அளவையியல், பரிசோதனை முறை, வரலாற்றியல், ஒப்பியல், புள்ளி விபரவியல், வினாக்கொத்து போன்ற பல முறைகளினூடாக ஆய்வுகள் உயர் கல்வி, தொழில் கல்வித்துறைகளில் அபிவிருத்தி நோக்கி மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வியியல் துறைகளாவன கல்வி முகாமைத்துவம், கல்வி அபிவிருத்தி, கலைத்திட்ட அபிவிருத்தி, ஆசிரிய வாண்மை, பாட அபிவிருத்தி என்ற வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் கல்வி முகாமைத்துவத்துறையில் வினைத்திறன்களை அதிகரிக்கப் பல ஆய்வுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

கல்வி முகாமைத்துவமானது எப்போதும் உயிர்த்துடிப்பான அபிவிருத்தி காணும் இலக்கைக் கொண்டது. சர்வதேசிய - தேசிய - பிரதேச சமூக மாற்றங்களுக்கு ஏற்பவே கல்வியமைப்பகளினதும் பாடசாலைகளினதும் இருப்பும், போக்கும், செயறபாடுகளும் அமைகின்றன.

இம்மாற்றங்களுக்கும் புதிய சவால்களுக்கும் முகம் கொடுத்து நோக்கங்களை நிறைவேற்ற கல்வி முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். இப்பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து தீர்வுகளைக் காணப் புதிய மேம்பாடுகளை ஏற்படுத்த செயல்நிலை ஆய்வுகள் வழிகாட்டுகின்றன.

ஒவ்வொரு கல்வி முகாமையாளரும் தம் நிறுவனத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் எளிமையான நடைமுறைப் பயனுள்ள ஆய்வுகளைச் செயல்நிலை ஆய்வுகள் சிக்கலான, சாதகமற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அறிவுசார் விசாரணையாக இது உள்ளது.

மேலும் உசாவியறிதல், பிரதிபலித்தல், செயன்முறைகளினூடாகப் பிரயோகப்படுத்தப்படுகின்றது. கல்வி முகாமைத்துவ நிர்வாக விருத்திக்கு ஆதரவளித்தல், மேம்பாடு, மறுசீரமைப்பு, புத்தாக்கம் போன்ற பணிகளுக்குச் செயல்நிலை ஆய்வுகள் பெறுமதிமிக்க ஊடகமென சர்வதேச ரீதியாக இனங்காணப்பட்டுள்ளது. தற்போது சர்வதேச கல்வியியலாளர்கள் கல்வி முகாமைத்துவ அபிவிருத்திக்கு சிறந்த வழி எனச் செயல்நிலை ஆய்வுகள் பிரயோகித்துக் காட்டி வருகின்றனர்.

சமகாலத்தில் ஆய்வை நடைமுறைப்படுத்தி, பிரச்சினைகளைத் தீர்பதற்காக செயற்படுத்தப்படும் திட்டமிட்ட முறைமையே செயல்நிலை ஆய்வாகிறது. நிலைமைகள் அறிதல் அதன் மூலம் கண்டுபிடிப்புக்களின் பயன் ஆகிய இரண்டையும் கொண்ட ஒரு செயற்கிரமமாகவும், முகாமையாளர் தம் முகாமைத்துவத் தொழிலில் ஈடுபடும்போது நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தமது தொழிலையே கற்கும் செயற்கிரமம்ாகவும் செயல்நிலை ஆய்வுகள் உள்ளன.

இது அனுபவ ஆய்வுக் கல்வியைப் புகட்டக்கூடியது. பிரச்சினையை நோக்கியது. குறித்த சூழ்நிலை சார்ந்தது. மேலும் தெளிவான எதிர்காலத்தை மையப்படுத்தியதாக, ஆய்வு - செயற்பாடு - கணிப்பீடு - மீள் எழுச்சி என்பவற்றைக் கொண்ட ஒரு சுற்றுச் செயற்கிரமமாகவுள்ளது.

### நிறுவகங்களில் ஆய்வுகள்

தறபோதைய கல்வி முகாமைத்துவ நிறுவகங்கள், திணைக்களங்கள், வலயங்கள், பாடசாலைகள் பல்வேறு பரிமாணங்களையும், உபதொகுதிகளையும் கொண்ட ஒரு பெரும் தொழிற்துறைகள் போன்றே இயங்குகின்றன. தொழிற்துறைகளில் எவ்வாறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான (Research and development) ஒரு பிரிவு மிக இயன்றியமையாததோ அதேபோல் கல்வி முகாமைத்துவ அமைப்புக்களிலும் பாடசாலைகளிலும் தேவை. ஒவ்வொரு கல்வி முகாமையாளர்களும், கல்விப் பணிப்பாளர்களும், அதிபர்களும், கல்வியியலாளர்களும், கல்வி முகாமைத்துவம் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட வேண்டும்.

இந்நிலை இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, சுவீடன், அமெரிக்கா போன்ற நாடுகளில் மிகச் சிறப்பாகவுள்ளது. இதற்கான உத்வேகங்களை செயல்நிலை ஆய்வுகள் வழங்குகின்றன.

கல்வி முகாமைத்துவ ஆய்வுகள் வழியாகப் புதிய கண்டுபிடிப்புக்கள், பிரச்சினைத் தீர்வுகள், புத்தாக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. முன்மொழியப்படும் முன்மொழிவுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. 'ஆய்வு வினாவை ஆக்குதல், தரவுகளைச் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், புடமிடுதல், பகுத்தாராய்ந்து மதிப்பீடு செய்தல், தீர்வுகளை நோக்கி நகர்த்தல் என்ற பல்பரிமாணங்களில் ஆய்வானது விரிந்து செல்கின்றது'.

கல்வி நிறுவனங்கள், பாடசாலைகளுடன் தற்போது எண்ணிறைந்த ஆய்வுகளை ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆய்வுப் பிரிவுகளை விரைவாக ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதனூடாக் எமது பிரதேசத்தில் புதிய முகாமைத்துவ ஆய்வுக் கலாசாரம் ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தலாம்.

செயல்நிலை ஆய்வானது கடுமையான ஆய்வுவிதிகள் சாராத, தரவிருத்தி சார்ந்த, தொடர்ச்சியான விடயம் சார்ந்த, விமர்சிக்கத்தக்க, மீள்நோக்குடைய விளங்கக்கூடிய, விளக்கக் கூடிய விஞ்ஞான சிந்தனையிலமைந்த பரிசோதனையாகவுள்ளது.

மேலும் ஒரு கல்வி முகாமையாளர் தான் பணிபுரியுமிடத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக ஆராய்ந்து, அதனை நிவர்த்திப்பதற்கான தீர்மானங்களைத் தாமே நெறிப்படுத்தித் திருத்தியமைத்து மதிப்பீடு செய்யும் செயலொழுங்குகள் அனைத்துமே செயல்நிலை ஆய்வாகின்றது.

### ஆய்வு வடிவமைப்பு

ஒரு பிரச்சினையின் தீர்வு அல்லது நிலைமை ஒன்றினை முன்னேற்றுதலே செயல்நிலை ஆய்வின் அடிப்படையாகின்றது. சரியான ஆய்வுத் தேவையும் திட்டமிடலுமே செயல்நிலை ஆய்வு வடிவமைப்பை (Action research design) ஒழுங்கமைக்கும்.

இது ஆய்வின் குறிக்கோளை அடைவதற்கும் நேரகால வரையறைக்கு ஏற்ப செயற்பாடுகளைச் சீராக்கவும், வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தவும், ஏனைய குழுவினரின் பொறுப்புக்களை செயற்பாடுகளை வரையறுக்கவும் உதவும். இதற்குப் பின்வரும் செயல்நிலை ஆய்வு வடிவமைப்புத் தகுதிப் பரமாணங்கள் வழிகளை இயம்புகின்றன.

1. ஆய்வுச் சுருக்கம் - அறிமுகம், நோக்கங்கள், பிரச்சினைகள், ஆய்வுக் களம், தரவுகள் திட்டமிடல், செயற்படுத்தல் (காணல் வாப்படம்), முன்மொழிவுகள், முழுமையான வடிவமைப்புச் சுருக்கம்.

2. ஆய்வின் தேவையும் தரவு சேகரித்தலும் - பிரச்சினையை இனங்காணல், ஆய்வு வினாக்களை உருவாக்கி, பிரச்சினைகள் தொடர்பான தகவல்களை சேகரித்தல்.

3. ஆய்வு வ'னாக்கள் - என்ன நடந்துள்ளது? நிலைமைகளுக்கு கரரணங்கள் என்ன? குறித்த நிலைமைகளை ஏன் கவனத்தில் கொள்ளவேண்டும்? நிலைமையின தாக்கம் என்ன? எதை மாற்ற வேண்டும்? மாற்றத்தை எவ்வாறு செய்வது? அதனால் கிடைக்கும் அனுகூலங்கள் எவை?

4. கண்டுபிடிப்பும் பிரதிபலிப்பும் - ஆய்வு வினாக்கள் தகவல்களிலிருந்து பகுப்பாய்வினூடாக பிரச்சினைகளின் மெய்மைகளைக் கண்டுபிடித்தல், அதன் பிரதிபலிப்புகள் மூலம் செயலுக்கான திட்டத்தை வடிவமைத்தல்.

5. தீர்வுகளைச் செயற்படுத்தல் - மேற்கொள்ளப்பட்ட தீர்வுகள் அடிப்படையில் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், காலம், கண்காணிப்பு, எதிர்நோக்கும் இடர்கள், அவதானிப்புகள், வெற்றிகள், சவால்கள், ஈடுபாடு தொடர்பான விடயங்கள்.

6. பெறுபேறுகள் - பெறுபேறுகளின் விளககம், அவை கணப்பிடபபடட முறைமை, தர - பண்புரீதியாகப் பெறப்பட்ட அடைவுகள், ஆய்வு தொடர்பான முழுமையான விபரம், தொடர்ந்து மேற்கொளள வேண்டிய திருத்தங்கள், நிறைவுரை.

இவ்வாறாகச் செயல்நிலை ஆய்வை வடிவமைக்கலாம். பாடசாலை முகாமைத்துவத்தை வினைத்திறனாக்க, பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண, எதிர்கால நோக்கில் பல அபிவிருத்திகளைச செய்யவேண்டியுள்ளது. இதற்கு கல்வியியல் ஆய்வுகள் உதவுகின்றன.

கல்வி முகாமைத்துவீத்தில் உள்ள பல விடயப் பரப்புக்களில் பிரச்சினைகளைத் தீர்க்க, மேம்பாடுகளைக் காண செயல்நிலை ஆய்வுகளை சிறப்பாகப் பயன்படுத்தலாம்.

### ஆய்வுகள் மேற்கொள்ளக்கூடிய விடயங்கள்

வினைத்திறன் பொருந்திய கல்வி நிறுவனங்கள், பாடசாலைகளின் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்காக செயல்நிலை ஆய்வுகள் பின்னனியாகவுள்ளன. எதிர்காலவியல் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கும், புத்தாக்கங்களுக்கும் இது வழிகாட்டுகின்றது.

கல்வி முகாமைத்துவம் என்பது ஏனையவர்களைக் கொண்டு வேலைகளை வினைத்திறனுடன் செய்யும் ஒரு கலையாகவுள்ளது. இதற்குத் தற்போது தகவல் தொழில்நுட்பமும் கை கொடுக்கின்றது. கல்வி முகாமையாளர்கள் ஆய்வுப் புலமையாளர்களாக இருப்பின் வெற்றிகரமானவர்களாகத் திகழ்வர்.

இவ்வகையில் ஊழியர்களின் தொழில் வாண்மையை விருத்தி செய்து, செயலாற்றுகைத் தரக் கணிப்பீடுகள், வளப்பயன்பாடு, விழுமிய விருத்திகள், புத்தாக்கங்கள், புதிய விருத்திகள், தவறுகளைத் திருத்துதல், ஊழலைக் கண்டுபிடித்தல், தவிர்த்தல் போன்ற எண்ணக்கரு நிலைமைகள் தொடர்பான கல்வி முகாமைத்துவத்துறையில் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்ளலாம். இவை பின்வரும் உதாரணங்களாகப் பரிணமிக்கின்றன.

* நேரம் பிந்திவரும், பொறுப்புணர்வற்ற, வகைகூறமுடியாத ஊழியர், உத்தியோகத்தர், ஆசிரியர்களைச் சீர்திருத்தல்.

* ஊழியர், ஆசிரியர்களின் வாண்மைத் திறன்களை அதிகரித்தல் தொடர்பான தொடருறு கல்விப் பிரயோகத் தேவைகளை மேற்கொள்ளல்.

* ஊழல், மோசடி, ஒழுக்கப் பிறழ்வுகளில் ஈடுபடும் கல்வி நிறுவன ஊழியர்கள் தொடர்பான ஆய்வுகள், கண்டுபிடிப்புகள், சீராக்கங்கள்.

* மேற்பார்வை, வழிகாட்டல், ஆலோசனை வழங்குதல் தொடர்பான செயற்கிரம பிரயோகங்கள்.

* கல்வி நிறுவன உள்ளீடுகள் - செயன்முறைகள், வெளியீடுகள், வளப்பயன்பாடு, சிக்கனம், விரயம் தொடர்பான ஆய்வுகள்.

* நவீன தகவல் தொழில்நுட்பத்தைக் கல்வி முகாமைத்துவத்தில் பிரயோகித்துப் பயன்களைப் பல மடங்கு அதிகரித்தல், மேம்பாடுகள்.

**பா. தனபாலன்**

* ஊழியர், உத்தியோகத்தர், ஆசிரியர் செயலாற்றுகைத் தரக்கணிப்பீட்டு அபிவிருத்தி நடைமுறைகள், பதவியுயர்வுகள், நியமனங்கள்.

* நிறுவனத்தில் முகாமைத்துவ முறைசார் - முறைசாராக் கட்டமைப்புக்களைச் சீராக்குதல்.

* ஊழியர்களைத் தமது தொழிலில் ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற ஊக்குவித்தல் நுட்பப் பிரயோகங்கள்.

* நிறுவன தரவிருத்தியுடன் சமூகம் நோக்கிய வேலைத்திட்டங்கள்.

கல்வி நிறுவனங்கள், பாடசாலைகளின் முகாமையாளர்கள், அதிபர்கள், தம் தொழிற்துறையோடு மேம்படுத்திக்கொள்ளும் ஏராளமான தேர்ச்சிகளை (compettrncies) செயலநிலை ஆய்வுகள் வழங்குகின்றன.

கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகள் அந்தந்த நிறுவனங்கள் பாடசாலைகளுக்கே உரித்தானவை. அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகள் உண்டு என்ற அர்ப்பணிப்புடன் (Dedication) புதிய பிரவேசங்களுடன் தீர்வுகளை ஆய்வுரீதியாக பகுத்தறிவுடன் தேடிச் செல்லல் கல்வி முகாமையாளர்களது பணியாகும்.

(தொடரும்)

# மேனாட்டு மரபுப் பல்கலைக்கழகங்களும் காந்தீயக் கல்வி முறையும்

**ஆ. சபாரத்தினம்**

**காந்தியடிகள் மண்ணக வாழ்வை நீத்த தினமான ஜனவரி 30 சர்வோதய தினமாக நினைவு கூரப்படுகிறது அதனையொட்டி இச் சிந்தனைகள் இங்கு தரப்படுகின்றன.**

அடிமைக் கல்வி வழங்கும் கல்விக் கூடங்களுக்கு, தம் பிள்ளைகளையோ ஆசிரமத்துப் பிள்ளைகளையோ அனுப்பக்கூடாது என்று கருதியவர் காந்தியடிகள். 1921 இல் கல்லூரிகளினின்றும் வெளியேறும்படி ஆசிரியர்களையும் மாணவர்களையும் கேட்டவர். தமது கல்விக் கொள்கைகளை விஸ்தரித்து, விரிவான திட்டம் வகுக்க சிந்தனையாளர் குழு ஒன்றை நியமித்தார். வட்டுக்கோட்டை ஈ. டபிள்யூ. அரியநாயகம் அதன் செயலாளரானார். வார்தா கல்வித்திட்டம் பிரபலமடைந்தது.

சுதந்திர இந்தியாவில் அதை ஆரம்பப் பாடசாலை கல்விக்கு ஏற்ற அத்திவாரமாக ஏற்றுக்கொண்டனர் எனினும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவர்கள் உலகப் போக்கில், கைத்தொழில் மயமாதல், பொருளாதார சுபீட்சத்தை மேனாட்டு முறையில் அடைதல் போன்ற இலட்சியங்களைக் கைக்கொண்டனர். மேனாட்டுக் கைத்தொழில் மயமாதல் மூலம் கண்ட தீமைகளைத் தவிர்ப்போம் என்று பேசினார்களே அன்றி அவற்றால் நகரங்களின் அசுரவேக வளர்ச்சியால் ஏற்பட்ட கிராமங்களின் நலிவு போன்ற கொடூரங்களிலிருந்து மக்களைக் காக்க முடியவில்லை. புதிய போக்குக்கேற்ற கல்வி முறையையே நடுத்தர, உயர்தர கல்வி நிலையில் ஏற்படுத்தினர். ஆடம்பரம் மிக்க பல்கலைக்கழகங்கள் சாதாரண மக்களின் வாழ்வினின்றும் முற்றிலும் வேறுபட்ட புதுமோகம் மிக்க பட்டதாரிகளை உருவாக்கின. தத்தம்தொழில் நுட்பத்தில் உலக நாடுகள் மெச்சும் அளவுக்கு அவர்கள் உயர்ந்தார்கள் என்றாலும் மனிதநேயம், நாட்டுப்பற்று இன்றித் தம் சொந்த முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டனர்.

இதனை ஓரளவு தடைசெய்ய பழைய முறையில் அமைந்த பல்கலைக்கழகங்களில் காந்தீய சிந்தனை, சமாதான விஞ்ஞானம் போன்ற பாடங்கள் சேர்க்கப்பட்டன.எனினும் இதனால் பெருஞ்செலவும், பொதுமக்களிடமிருந்து முற்றிலும் விலகிய ஆடம்பர கலாசாரமும் பெருகுவதைத் தடைசெய்ய முடியவில்லை. இதனால் காந்தீய கிராமிய நிறுவனங்கள் காந்தீய சிந்தனையாளரால் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டன. பத்துக்கும் மேற்பட்ட இவ்வமைப்புக்கள் மேனாட்டு வழிக்கு வேறான சமூக மாற்றத்தைத் தம் பிரதேசங்களில் ஏற்படுத்தத் தம்மால் ஆன மட்டும் பாடுபட்டன. சில பல்கலைக்கழக அந்தஸ்து அளிக்கப்பட்டு வெளிநாட்டு நல்லோரின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

ஆனால் அவற்றின் வீதம் மிகச் சிறியது. இந்தியப் பல்கலைக்கழகங்களின் உயர் ஆய்வுக்குழுவில் அங்கம் வகித்த சோ. சிவபாதசுந்தரம், 1980களின் முற்பகுதியில் தான் பிறந்த கரம்பனுக்கு வந்திருந்தார். அவர் படித்த புனித அந்தோனியார் கல்லூரிக்கு அழைத்து ஒரு கலந்துரையாடலை ஆசிரியர் குழாம் ஏற்பாடு செய்திருந்தது. அப்போது அவர் சொன்னார் "நாலு புத்தகங்களில் ஆறு பந்தியை எடுத்துச் சேர்த்து ஒரு அத்தியாயத்தை ஆக்கி, அப்படி ஆக்கிய அத்தியாயங்கள் நான்கின் தொகுப்பை 'டாக்டர்' பட்ட ஆய்வாக வெளியிட்டு, 'முனைவர்' என்ற சொல்லைத் தமது பெயருக்கு முன் சேர்த்துக் கொள்பவர்களுடைய நூல்களைப் படித்துப் படித்துக் களைத்துவிட்டேன்"

இதே காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காசிநாதரின் விற்கென்ஸ்ரைன் பற்றிய கலாநிதிப் பட்ட அரிய ஆய்வு நூல் வெளிவந்தது. அதன் அநுபந்தத்தில் அவர் தொல்காப்பிய மரபியற் சூத்திரங்கள் சிலவற்றை எடுத்தாண்டு, "இருபதாம் நூற்றாண்டில் தலைசிறந்த மெய்யியலறிஞர் சிந்திக்கத்தொடங்கியவற்றை தொல்காப்பியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளார். இது மேலும் ஆராயப்பட வேண்டியது" என்ற கருத்தை வெளியிட்டார். அது யாழ்பல்கலைக்கழகத்தில் இருந்தது. அந்த நூலை பல்கலைக்கழகத்திற்கு வழங்கிய பேராசிரியர் முயன்றும் அப்பக்கங்களைப் பெறமுடியவில்லை.

''சர்வோதயம்'' (மதுரை) மாதசஞ்சிகையில் (பங்குனி, 2004) ஆர். நடராஜன் எழுதிய ''கல்வி முறையில் காந்தீயப் பரிசோதனை'' என்ற நூலின் விமர்சனத்தில் குறிப்பிடுகிறார்.

"பல்கலைக்கழகங்கள், வித்தியாபீடங்கள், சர்வகலாசாலைகளின் உயர்கல்வி ஆய்வுகள் எல்லாம் பட்டத்திற்காகப் பட்டும் படாமலும் எழுதப்படும் நிலையில் இந் நூலாசிரியர் உள்ளார்ந்த, ஆய்வு வேள்வியாகவே இந்நூலைப் படைத்துள்ளார்.

''காந்தியடிகள் உருவாக்கிய சேவா கிராம ஆசிரமத்திலேயே பாலர் நிலையில் தான் ஆதாரக் கல்வி பின்பற்றப்பட்டு வருகின்றது."சேவாலயம்'' பள்ளியின் சிறப்பான செயற்பாடுகள் இந்திய அளவில் பிரபலம் ஆகவேண்டும். ஆதாரக் கல்வியைஅனைத்து நிலையிலும் செயலுக்குக் கொண்டு வரலாம் எனச் செயல்முறைகளை வடிவமைப்புச் செய்து அறிக்கை கொடுத்து ஸாகீர் ஹுசேனின் அறிக்கையைப் படிக்கும் உணர்வினை இந்த நூல் தருகின்றது.

"கல்விக்கூடங்கள் சமுதாயத்திடமிருந்து பிரிந்து, 'துண்டு தெறித்தாற் போல்' இல்லாமல் சமுதாயத்திடம் 'ஒட்டி உணர்ந்து' இருக்கவேண்டும் என்ற கருத்தினை சேவாலயா மெய்ப்பிக்கின்றது.

முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் சேவாலயாவின் முழுப்பரிமாணத்தினை வெளிப்படுத்தும் வகையில் 'கல்வி முறையில் காந்தீயப் பரிசோதனை' உள்ளது.

காந்தீயத்தைக் குறித்து இதுவரை 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்று என்றில்லாமல் காந்தீயக் கல்வியில் இதுதான் வழி, இப்படித்தான் போகவேண்டும் என வழிகாட்டும் கையேடாக நூல் உள்ளது.

கல்வி இயல் கற்கும் ஆசிரிய மாணவர் ஏதோ பல கல்விக் கொள்கைகளில் ஒன்றாக காந்தீயக் கல்விக் கொள்கையையும் கற்கிறார்களே அன்றி, அது நம் பண்பாட்டுச் சூழலுக்கு அவசியமானது என உணர்வதில்லை. மேனாட்டுக் கல்வி முறை சிந்திக்கும் ஆற்றலை மழுங்கடித்துவிட்டது என்று குறைசொல்வோர் பெருகி உள்ளனர். ஆனால் அக்குறையை நிவிர்த்தி செய்ய வழி என்ன என்று சிந்திப்போர் யாரும் இலர்.

ஓர் பாடசாலை அதிபர் சொன்னார் ''என்ன தான் புதிய முறைகள், புதியதிட்டங்களைக் கொண்டுவந்தாலும், திணைக்களத்திலும், பாடசாலைகளிலும் பழமையில் ஊறியவர்கள் இருக்கும் வரை எந்தப் புதுமையையும் நடைமுறைப்படுத்த இயலாது''

ஆனால் எங்கோ ஓரிடத்தில் தொடங்கியே ஆகவேண்டும். காந்தியுகத்தில், (1920-50)காலப் பகுதியில் இலங்கையில் பிரதானமாக யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களே காந்தீயக் கருத்துக்களை கல்வி கற்றவர் மத்தியில் பிரபலப்படுத்தினர். அதை இன்று உள்ள ஆசிரியருட் சிலராயினும் நினைவு கூர்ந்து தாங்கள் வெறும் சம்பளத்துக்கு வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் அல்ல என்பதை உலகிற்கு உணர்த்த வேண்டும். □

## மலேசியாவில் இருந்து தமிழர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

மலேசியாவில் இருந்து பொது மன்னிப்பின் கீழ் பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நீண்டகாலமாக மலேசியாவில் வாழ்ந்த பல தமிழ்க்குடும்பங்களும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம் இலங்கையில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல வெளிநாடுகள் தமது நாடுகளில் வேலைவாய்ப்பு வழங்க முன்வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

(அம்பாந்தோட்டை)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டைப் பகுதியில் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கமைய 5ஆயிரத்து 500 வீடுகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக கொன்னுருவ பகுதியில் 3 ஆயிரத்து 500 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்று அம்பாந்தோட்டை உதவிமா செயலாளர் டபிள்யூ தர்மசிறி தெரிவித்துள்ளார். (க-9)

## வெளிச்சம் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் கலை, இலக்கிய, சமூக இதழான வெளிச்சத்தின் எண்பத்தியொன்பதாவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையின் ஒரு பகுதியுடன், மாலிகா, புதுவை இரத்தினதுரை, கை.சரவணன், செல்வா ஆகியோரின் கவிதைகளும் முல்லை யேசுதாசன், க.சட்டநாதன், மு.அநாதரட்சகன், செ.யோகநாதன் ஆகியோரின் சிறுகதைகளும் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், மயிலங்கூடல் பி. நடராசன், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் கட்டுரைகளும் செங்கைஆழியான், ஞானரதன் ஆகியோரின் தொடர் கட்டுரைகளும் யோ.சத்யன்,ஈ.குமரன் ஆகியோரின் நூல் மதிப்பீட்டுரைகளும் மூதறிஞர் சொக்கன், கவிஞர் தில்லைச்சிவன், எழுத்தாளர் கே. வி.நடராஜன் ஆகியோருக்கான அஞ்சலியுடன் குறிப்புகள் உட்பட மற்றும் பலவும் இடம்பெற்றுள்ளன. (ற)




**அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்று முன்தினம் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் பொதுமக்களால் நடாத்தப்பட்ட பேரணியின் காட்சி.**

## அரசின் கபட நோக்கங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்தும்

## -செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

(திருநெல்வேலி)

சுனாமி பேரலை தாக்கி ஒருமாத காலமாகியும் ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகப் பகுதியில் ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த காலங்களைப்போல் தமிழ் மக்களின் உரிமை உட்பட அனைத்தையும் ஓரம்தள்ளி, சுனாமியால் கிடைக்கின்ற பணத்தைக் கையாடலாம் என அரசாங்கம் கருதுகின்றது.

இவ்விடயம் நீண்ட நாட்களிற்கு தாக்குப்பிடிக்காது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் மனிதர்கள் தான்.

ஆனால் இந்த அரசு வடக்கு- கிழக்கைப் புறக்கணித்துவிட்டு தென் இலங்கையில் பாதிக்கப்பட்ட இடங்களை மேம்படுத்துவதில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்திவருகின்றது.

அதை விட சர்வதேசத்தின் நிதியுதவிகளைக் கொண்டு தனது அரசை நடத்த நினைப்பதுடன், ஆயுதம் வாங்கவும் முற்படுவதானது மிகவும் கேவலமான ஓர் விடயமாகும்.

சுனாமியால் வாழ்விழந்த மக்களைப் பற்றி சிந்திக்காமல் தேர்தலைப் பற்றியே இந்த அரசு சித்திக்கிறது.

அரசாங்கத்தின் இவ்வாறான கபட நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து உலக நாடுகளுக்கும் தெளிவுபடுத்தவுள்ளது.

இதுதவிர, கிழக்குப் பகுதியில் மக்களை மீள்குடியேற்றுதல் என்ற போர்வையில் தங்களுடைய பெரும்பான்மை இனத்தினரையே அப்பகுதியில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது எனவும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி மேலும் தெரிவித்தார். (ற-43)

## கணக்கெடுப்பு

(புங்குடுதீவு)

சமுர்த்தி சமூக நலன்புரி நன்மைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கணக்கெடுப்பு புங்குடுதீவு பிரதேசத்தில் சமுர்த்தி உத்தியோகத்தரினாலும், கணக்கெடுப்பாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-126)

## கிருஷ்ண பக்திக் கழகத்தினர் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு அகில உலக கிருஷ்ண பக்திக் கழகம் பல உதவிகளை செய்து வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களை பக்தி மூலம் ஆற்றுப்படுத்தும் நடவடிக்கையோடு, சமைக்க உணவுகள், மருந்துப் பொருட்கள் மற்றும் உடுபுடவைகளும் இது வழங்கியது.

கிருஷ்ண பக்திக் கழகத்தின் பருத்தித்துறை தும்பசிட்டியில் தங்கியிருந்து அங்கேயே சமைத்து உணவுகளை வழங்கி வருகின்றனர். இக் கிருஷ்ண பக்திக் கழகத்தில் உலகில் உள்ள எல்லா நாட்டவர்களும் அடங்கியிருக்கின்றனர். (ந-35)

# ஈராக்கில் இன்று பொதுத்தேர்தல்

(பாக்தாத்)

ஈராக்கில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.


நேற்று முன்தினத்துடன் ஈராக்கில் தேர்தல் பிரசாரங்கள் முடிவுக்கு வந்தன. இந்நிலையில் தேர்தலைக் குழப்புவதற்காக ஆங்காங்கே தீவிரவாதிகளும் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஈராக் முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தலை நடத்தவிடாமல் செய்வதற்காக தீவிரவாதிகள் மும்முரமாக உள்ளதால், அவர்களது சதிவேலைக்களை முறியடிக்க ஈராக் அரசு பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஈராக் எல்லைகள் மூடப்பட்டுள்ளன. பதற்றம் மிகுந்த பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.


ஈராக்கிலிருந்து குடிபெயர்ந்து 14 நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள 2 இலட்சத்து 80 ஆயிரம் பேர் இந்தத் தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர். அவர்கள் தங்கியுள்ள நாடுகளில் சிறப்பு வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் தேர்தல் ஆரம்பமாகிவிட்டது. சிட்னி நகரில் அமைக்கப்பட்டுள்ள ஒன்பது வாக்குச் சாவடிகளில் ஈராக் மக்கள் வாக்களித்துவிட்டு கைகளில் அடையாள மையை வைத்துக்கொண்டுசென்றனர்.

இதேபோன்று ஜோர்டான் தலைநகர் அம்மானிலும் ஈராக் மக்கள் நேற்று முன்தினம் வாக்களித்தனர். சிரியா நாட்டில் தேர்தல் ஏற்பாடுகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை. (ற)



வாகனங்களால் சுற்றுச் சூழல்மாசுபடுவதற்கு எதிராக அகமதாபாத்தில் நடைபெற்ற சைக்கிள் பேரணியில் பங்கேற்ற பெண்கள்.



கண்பார்வை இல்லாதோர் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட விர்ச்வுல் விஷன் எனும் தொழில்நுட்பத்தை குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் தொடக்கி வைத்தார். இந்த மென்பொருள் கேட்கும் திறனைக்கொண்டு செயல்படும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கணினியை இயக்கும் மாணவிகளுடன் அப்துல் கலாம்.

# ஈராக்கில் கார்க் குண்டுவெடிப்பு ஆறு பேர் பலி; 13 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் மின்நிலைய வளாகத்தில் நேற்றுமுன்தினம் கார்க்குண்டு வெடித்ததில் ஆறுபேர் பலியாகினர். ஈராக்கில் இன்று பொதுத்தேர்தல் நடக்கிறது.

நேற்று முன்தினம் பிரசாரம் ஓய்ந்தது. இந்தத் தேர்தலை சீர்குலைப்பதில் சதாம் ஆதரவு கெரில்லாக்கள் மும்முரமாக உளளனர்.

தெற்கு, பாக்தாத்தில் துரா அருகே உள்ள மின்நிலையத்துக்கு நேற்று முன்தினம் காலை ஒருவர் முகத்தை மூடியபடி காரில் வந்தார்.

அங்குள்ள பாதுகாவலர்கள் அந்தக் காரை நிறுத்தி விசாரித்தனர். அதற்குள்ளாக அந்தக் கார்வெடித்துச் சிதறியதில் நான்குபேர் உடல் சிதறிப் பலியாகினர். படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்கக்கப்பட்ட 15 பேரில் இரண்டு பொலிஸாரும் இறந்தனர். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# இரு நாட்களில் 10 முறை நிலநடுக்கம்

(நிக்கோபார்)

நிக்கோபார் தீவுகளில் கடந்த இரண்டு நாட்களில் பத்துமுறைக்கு மேல் நிலநடுக்கம் ஏற்பட்டது. காமோடார் தீவுகளில் 6 முறை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பிறகும் நிக்கோபார் தீவுகளில் அடிக்கடி நிலநடுக்கம் தொடர்கிறது. இதனால் மக்கள் கடும் பீதியடைந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவில் 5.1 முதல் 5.8 எனப் பதிவாகியிருந்தன.(ற)

# தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு அஞ்சாமல் வாக்களியுங்கள்

## ஈராக்கியர்களிடம் புஷ் வேண்டுகோள்

(வோஷிங்டன்)

ஈராக்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றத் தேர்தல் நடக்கிறது.

அந்த நாட்டில் பெரும்பான்மையாக வாழும் ஷியா முஸ்லிம்கள் தேர்தல் நடத்துவதை ஆதரிக்கிறார்கள். தேர்தலிலும் போட்டியிடுகிறார்கள். சுனி முஸ்லிம்கள் சிறுபான்மையாக உள்ளனர். அவர்கள் தேர்தலை எதிர்க்கிறார்கள். யாரும் வாக்களிக்கக்கூடாது என்று வாக்காளர்களை மிரட்டி வருகின்றனர்.

இந்தநிலையில் தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு அஞ்சாமல், வாக்குப்போடச் செல்ல வேண்டும் என்று ஈராக்கியர்களை அமெரிக்க அதிபர் கேட்டுள்ளார்.

2 ஆவது முறை ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்ட பிறகு நேற்று முன்தினம் முறையாக புஷ் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"ஈராக் நாட்டு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள் பொதுத்தேர்தல் நாளாகும்.

தேர்தலின்போது ஈராக்கியர்கள் தீவிரவாதிகளுக்கு அஞ்சாமல் வாக்களிக்க வேண்டும். பெருமளவில் ஈராக்கியர்கள் வாக்களிக்க முன்வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

சிலர் தீவிரவாதிகளுக்குப் பயந்து வாக்களிப்பதில்லையென முடிவு எடுத்து இருக்கலாம். அவர்களையும் ஓட்டுப்போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஈராக்கியர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள ஆயத்தமாவதற்கு முன்பு அமெரிக்க இராணுவம் திரும்பப் பெறப்படவேண்டும் என்பதற்கு மேல் வேறு எதையும் எதிரிகள் விரும்பவில்லை. அவர்களின் நோக்கம், ஜனநாயக ஆட்சி ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதுதான். அந்த அளவுக்கு சுதந்திரம் அவர்களை அச்சுறுத்துகிறது.

அடுத்த ஆண்டு வாக்கில், ஈராக்கியர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் அளவுக்கு அவர்களைத் தயார்படுத்திவிடுவோம்.


மக்களுக்கு விடுதலை கிடைக்கத் தொடர்ந்து பாடுபடுவோம். இதற்கான தேவையினை தோழமை நாடுகளுக்கு எடுத்துக்கூறி அவர்களையும் இணைத்துக்கொண்டு செயல்படுவோம்.

அமெரிக்கா மாதிரியான ஜனநாயகத்தை அனைத்து நாடுகளும் பின்பற்றப் போவதில்லை ஆனால் மனித உரிமையையும், மனித கண்ணியத்தையும் காப்பாற்றுவதுதான் ஜனநாயகம். அதை ஏனைய நாடுகள் பின்பற்றவேண்டும்.


சுதந்திரத்துக்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள். இருந்தபோதிலும் உலகம் முழுவதும் அது பரவிவருகிறது. சுதந்திரத்தைப் பரப்புவதற்காக அமெரிக்க குடிமக்கள் பலர் நிறையத் தியாகம் செய்து இருக்கிறார்கள். அவர்களின் நனவை கௌரவிப்போம் எனவும் புஷ் தெரிவித்தார்.

ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் எப்போது வெளியேறும் என்று நிருபர்கள் கேட்டபோது, அதற்கு புஷ் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

அமெரிக்காவுக்கு உள்ள கடமையை



விரைவில் நிறைவேற்றி முடிப்போம. பாதுகாப்பான நிலையான ஈராக்கை உருவாக்குவதுதான் அமெரிக்காவின் கடமை என்று அவர் பதில் கூறினார். (ற)



ஈராக்கின் பாக்தாத் நகரில் வாக்குப் பதிவு நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த பள்ளி எதிரே தூள்தூளாக வெடித்துச் சிதறும் கார்.

# கடல் அலையில் திடீர் ஒளி

புதுச்சேரி அருகே கடலில் தெரிந்த பிரகாசமான ஒளியினால் மக்கள் பீதியடைந்தனர். சுனாமி வந்துவிடுமோ என்ற அச்சத்தில் வீடுகளை விட்டு வெளியேறினர்.

புதுச்சேரி அருகில் உள்ள தமிழகப் பகுதியான பிள்ளைச்சாவடி மீனவக் கிராமத்தில் நேற்று முன்தினமிரவு கடலோரத்தில் சிலர் உட்கார்ந்து இருந்தனர். அப்போது கடலில் பிரகாசமான ஒளியைப் பார்த்துள்ளனர். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்கள் உடனடியாக ஊருக்கு ஓடிச்சென்று மற்றவர்களிடம் கூறியுள்ளனர்.

இதைக்கேட்டவுடன் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் அச்சத்துடன் திரண்டனர். கடல்கரையிலிருந்து 20 மீற்றர் தூரத்தில் கடலில் அரைக் கிலோமீற்றர் தூரத்திற்குப் பிரகாசமான ஒளியைப் பார்த்துள்ளனர். பிரகாசமான ஒளியுடன் கடல்நீர் சூழல்வது போலவும் தெரிந்ததாம். கடற்கரையோரம் முழுவதும் புகைவாசனையும் வந்ததாம்.

கடலில் தெரிவது மீன்கூட்டமாக இருக்கலாம் என்று நினைத்த ஒருவர் கடலில் இறங்கி வெளிச்சத்தை நோக்கி நீச்சலடித்துச் சென்றுள்ளார். அவரைக் கடல்நீர் இழுத்துச் செல்லவே கூச்சலிட்டுள்ளார். அருகில் இருந்த மற்றவர்கள் அவரைக் கரைக்கு இழுத்துவந்துள்ளனர். அதற்குள் அவர் மயங்கி விழுந்தார். அவரைத் தொடர்ந்து சிலரும் மயங்கிவிழுந்தனர். மயங்கி விழுந்தோர் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடலில் தெரிந்த பிரகாசமான ஒளியினால் சுனாமி வந்துவிடுமோ என்று பயந்த மக்கள் அனைவரும் கடற்கரையிலிருந்து ஓட்டம் பிடித்தனர். வீட்டிலிருந்த மூட்டை முடிச்சுக்களுடன் மேடான பகுதிகளுக்குச் சென்றனர். கடலில் தெரிந்த ஒளி 20 நிமிடங்களுக்கு இருந்ததாக ஊர்மக்கள் கூறினர். இது தொடர்பாக தகவல் அறிந்ததும், பொலிஸாரும் கிராமநிர்வாக அதிகாரியும் விரைந்துசென்று இது குறித்து விசாரணை நடத்தினர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் ப்ரபரப்பு ஏற்பட்டது. (ற)



பிரான்ஸ் நாட்டின் லயன் நகரில் புதன் கிழமை நடந்த உலக சமையல் கலைப் போட்டியில் அறுசுவை மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கப் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் பிரான்ஸைச் சேர்ந்த செர்கி வியாரா.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் - குறள்

வலம்புரி

# ஏழை மாணவர்களுக்கு உதவ முன்வரவேண்டும்

இலவசக் கல்வியின் தந்தையென சி.டபிள்யூ. கன்னங்கர போற்றப்படுகின்றார். இந்த நாட்டில் இலவசக் கல்வியின் அறிமுகத்தை தொடர்ந்தே கல்விகற்கும் வாய்ப்பு ஏழைப் பிள்ளைகளுக்கும் கிடைத்தது.

பணக்கார வர்க்கத்திற்கு மட்டுமே கல்வி என்ற நிலைமை மாறி ஏழைகளும் கற்கலாம், அவர்களும் உயர் பதவிகளை வகிக்கலாம் என்ற நிலைமை இலவசக் கல்வியாலேயே ஏற்பட்டதெனில் அது மிகையன்று.

இவ்வாறு ஏழை மக்களிடம் கல்வியை ஏற்படுத்து[illegible]தற்காக இலவசக் கல்வி, இலவச சீருடை, [illegible]வச பாடப்புத்தகம், இலவச மதிய உணவு என்றெல்லாம் காலத்திற்குக்காலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் மனித மூலதனத்தை அதிகரிப்பது, அதனூடாக வறுமையை ஒழிப்பது, நாட்டின் அபிவிருத்தியை வியாபிப்பது, சமத்துவத்தை ஏற்படுத்துவது என்ற நோக்கிலேயே காலத்திற்குக் காலம் மேற்கூறப்பட்ட "இலவசங்கள்" அறிமுகப்படுத்தப்பட்டன.

இவ்வாறே எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் இலவசக் கல்விக்கான வாய்ப்புகளை அரசு வழங்குகின்றபோதிலும், அதற்குள் நடக்கின்ற குத்துவெட்டுக்கள், ஊழல் மோசடிகள், ஏழைகளின் வயிற்றில் அடிப்பதாகவே இருக்கின்றன.

குறிப்பாக பாடசாலை அனுமதிகளின்போது பிரபலமான பாடசாலைகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற "டொனேசன்" கலாசாரம் மிகப்பெரும் கொடுமையாகும்.

மாணவர்கள் பாடசாலையில் சேர்வதற்கு எந்தவித டொனேசன்களையும் செலுத்தத் [illegible]வையில்லை என்பது சட்டத்தில் உள்ளது.

அப்படியிருந்தும் பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திச் சங்கங்கள் டொனேசன் பெற்றுக் கொள்வது எந்தளவு தூரம் நியாயமானதாகும். அதிலும் டொனேசன் பெற்றுக்கொள்வதென்பது என்பதைவிட "இவ்வளவு தொகை" டொனேசனை தரவேண்டும் இல்லையேல் அனுமதி தர முடியாதென கூறுவது கொடியதல்லவா? இத்தகைய கொடுமையை கல்வி அதிகாரிகளும் கல்வியியலாளர்களும் ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்?

ஆம், டொனேசனால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை மாணவர்கள் அல்லவா? ஏழைகள் பாதிக்கப்பட்டால் அதற்காக குரல் கொடுப்பதற்கு யார் உளர்? இதுவே உண்மை. இந்த நிலைமையே நம் நாட்டில் நடக்கிறது. பணக்கார வர்க்கம் இ[illegible]பத்தைந்து, முப்பதெனத் தள்ளிவிட்டு தமது பிள்ளைகளை பிரபலமான பாடசாலைகளில் சேர்த்து விடுகின்றனர்.

இதனால் ஏழை மாணவர்களுக்கு பிரபலமான பாடசாலைகளில் அனுமதி கிடைக்காமல் போகின்றது. இத்தகைய மோசடிகள் நடைபெறகின்ற போது இந்த மண்ணில் மாணவர்களின் கல்விப் பெறுபேற்றின் வீழ்ச்சி பற்றி பேசுவதில் அர்த்தமிருக்கமுடியாது.

கடந்த சில வருடாங்களாக நமது மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து வருவதற்கான அடிப்படைக் காரணம் பாடசாலைகளில் நிலவும் டொனேசன் கலாசாரமே ஆகும். இதற்கு டொனேசன் பெற்றுக் கொள்ளும் பாடசாலைகளே சான்றாகும்.

ஆக, என்று இந்தக் கொடூரமான டொனேசன் கலாசாரம் இல்லாதொழிகிறதோ அன்றுதான் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் உயர்வடையும். ஏழை மாணவர்களுக்கு பிரபலமான பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

## இலண்டன் புறப்படுவதற்கு முன்னர்

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாலா அரச அதிகாரிகளுடன் சந்திப்பு?

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இலண்டன் பயணமாவதற்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் போது அங்கு அரச அதிகாரிகளுடனும் நோர்வே அனுசரணையாளர்களுடனும் சந்திப்பை நடாத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் விடயத்தில் புலிகளும், அரசாங்கமும் உடன்பாடொன்றை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மீண்டும் இலண்டன் பயணமாவதற்கு முன்னர் இத் தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் ஒற்றுமையாக செயற்படுமாறு சர்வதேச சமூகத்தின் அழுத்தம் தொடர்ந்தும் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

நிவாரணப் பகிர்ந்தளிப்பு தொடர்பில் கடந்த புதன் கிழமையன்று இருதரப்பினருக்குமிடையில் சந்திப்புகள் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளுக்கு நிவார ணம் நேரடியாக சென்றடைகிறது என்பதில் மறுபேச்சுக்கிட மில்லை என்றார்.

மேலும், சுனாமியை அடுத்து இலங்கையின் சமாதானம் தொடர்பில் பிரஸ்லஸ்ஸில் சந்தித்த ஐரோப்பிய ஜூனியன், ஜப்பான், நோர்வே, அமெரிக்க பிரதிநிதிகள் ஒற்றுமையாக செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# இலங்கைத் தமிழ் இளைஞனைக் கொலை செய்த 2 பிரிட்டிஷ்காரருக்கு 25 வருட கடூழியச்சிறை

(இலண்டன்)

இலங்கைத் தமிழ் இளைஞரொருவரை இன ரீதியாகத் திட்டி துன்புறுத்திக் கொலை செய்த இரு பிரிட்டிஷ் வெள்ளையின இளைஞர்களுக்கு 25 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தெற்கு இங்கிலாந்தின் கென்ற் பிராந்தியத்தில் அஸ்போர்ட் பகுதியில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் பேபிசங்கர் கதிர்காமநாதன் (வயது-24) என்ற தமிழ் இளைஞர் இரு பிரிட்டிஷ் இளைஞர்களால் மிக மோசமாகத் தாக்கிக் கொலை செய்யப்பட்டார்.

தனது நண்பனொருவருடன் இவர் ஒற்றையடிப் பாலமொன்றினூடாகச் செல்கையில், அதிக மதுபோதையுடன் எதிர்ப்புறத்தில் வந்த இரு பிரிட்டிஷ் இளைஞர்களே இவரை இனரீதியாக மோசமாகத் திட்டியதுடன் பின்னர் இவரை கடுமையாகத் தாக்கியுமுள்ளனர்.

தலையில் ஏற்பட்ட காயத்தால் அந்தத் தமிழ் இளைஞன் மயங்கி வீழ்ந்த போதும் அவனை இவ்விருவரும் காலால் பலமாகத் தாக்கியதில் அவ்விளைஞன் அவ்விடத்திலேயே உயிரிழந்தான்.இக் கொலையுடன் தொடர்புடைய ஜேம்ஸ் ரொசிற்ரர் (வயது-22) மற்றும் ரொனி பிலி (வயது-19) ஆகிய இரு வரையும் கைது செய்த பொலிஸார், இவர்களைத் தீவிர விசாரணைக்குட்படுத்திய போது இவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டனர்.

இவர்கள் இருவரும் மெய்ட்ஸ்ரோன் நீதிமன்றில் நிறுத்தப்பட்டபோது, இனரீதியாக தமிழ் இளைஞனை மோசமாகத் திட்டி மிகக் கொடுமையாகத் தாக்கி கொலை செய்த குற்றத்திற்காக இவ்விரு பிரிட்டிஷ் இளைஞர்களுக்கும் 25 வருட கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.(ந)

# ஜனாதிபதி மீதான ஜே.வி.பி யின் விமர்சனத்திற்கு —ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடும் கண்டனம்—

(கொழும்பு)

ஜனாதிபதியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் கடுமையாக விமர்சித்துவரும் ஜே.வி.பியின் செயற்பாடு குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்தக் கண்டனங்கள் எழுந்தன.

மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பியினரின் மிரட்டல்களையும் அவர்கள் கண்மூடித்தனமாகச் செய்யும் விமர்சனங்களையும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது எனக் கட்சியின சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர்.

ஜனாதிபதிக்குச் சேறு பூசும் விதத்தில் அறிக்கை விடுவதையும் பொதுக்கூட்டங்களில் கடுமையான சொற் பிரயோகங்கள் மூலம் ஜே.வி.பியினர் அவரை விமர்சிப்பதையும் தொடர்ந்து அனுமதிக்கமுடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது செய்து கொள்ளப்பட்[illegible] உ[illegible]ன்படிக்கையை மீறும் வகையில் தன்னிச்சையாக ஜே.வி.பியினர் செயற்பட்டு வருகின்றனர்.

எனவே உடனடியாக ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்களை அழைத்து இதற்கு ஜனாதிபதி முடிவு காண வேண்டும் என மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர்கள் பலரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, நிமால் சிறிபால டிசில்வா போன்றோர் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்து கட்சிப் பிரமுகர்களின் இக் கருத்தை அவருக்கு எடுத்துரைத்ததாக தெரியவருகிறது. (ந)

## முதல் தடவையாக இன்று

# இளைஞனும் யுவதியும் மோதும் மல்யுத்தம்

(மும்பை)

மும்பையில் உள்ள அந்தேரி விளையாட்டு வளாகத்தில் அகில இந்திய மல்யுத்தப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இங்கு இன்று ஒரு இளம் பெண்ணும் இளைஞனும் மோதிக்கொள்ளும் மல்யுத்தம் இடம்பெறவுள்ளது.

போட்டியை நடாத்தி வரும் சிவசேனா கட்சி எம்.பி.சஞ்சய் நிருபம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளார். மல்யுத்த வரலாற்றில் இதற்கு முன் இப்படி ஆணும், பெண்ணும் பலப் பரீட்சை நடத்தியதில்லை.

உடல் வலிமையில் சிறந்தவர் ஆணா? பெண்ணா? என்பதை தீர்மானிக்கப்போகும் இந்த மல்யுத்தத்தில் 'சப்-ஜூனியர்' தங்கப்பதக்கத்தைப் பெற்ற கவுசல்யா என்ற பெண்ணே உள்ளூர் மல்யுத்த வீரராக பப்புயாதவ்வுடன் மோதவுள்ளார்.

இவர்கள் இருவருமே வெற்றிபெற தங்களுக்குத் தான் வாய்ப்பு இருப்பதாகக் கூறுகின்றார்கள். மும்பை விளையாட்டு ரசிகர்களிடமும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த மல்யுத்தப்போட்டி நடிகர்கள் சல்மான்கான், சுனில் ஷெட்டி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

போட்டியில் வெற்றி பெறுபவருக்கு 4 இலட்சம் ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்படும். இந்த மல்யுத்தப் போட்டியைக் காண அனைத்து இருக்கைகளும் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுவிட்டன. (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அலையின் உச்சியில் இருப்பவன் அந்தக் கணத்திற்கு எல்லாம் நன்மையே என்று எண்ணிக் கொள்கிறான். பள்ளத்தில் இருப்பவன் உலகமே தீமை என்கிறான். ஆனால் அனைத்திலிருந்தும் விலகித் தனித்து நின்று பார்ப்பவன் எங்கும் தெய் வீக லீலையைக் காண்கிறான். நாம் எங்கும் நிற்க முடியாது. அடியும் உதையும் பட்டு, அங்கு மிங் கும் அலைக்கழிக்கப்பட்டவாறே முன்னேறிக் கொண்டிருக்கிறோம் நாம் என்ன செய்ய முடியும்?

சுவாமி விவேகானந்தர்

## 15 அம்ச தேசியக்...

அரசியல் கட்சிகளின் சிந்தனை வேறுபட்டாலும் தேசியக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது செயற்படுத்துவதற்கான கலந்துரையாடலில் இணைந்து கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். முதலாவது நிகழ்ச்சி திட்டமாக சமாதானமும் ஒற்றுமையும் என்று மகுடமிட்டுள்ள ஐ.தே.க. 20 வருடகால யுத்தத்திற்கு இடைவேளை கிடைத்திருப்பது போர்நிறுத்த உடன்படிக்கையால் மட்டுமே என்பதை சுட்டிக்காட்டியிருப்பதுடன் சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு பதவியிலிருக்கும் அரசாங்கம் மேற்கொள்ளும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு உதவுவதுடன் ஆட்சிக்கு வந்தால் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்போம் என்றும் பிரிக்கப்படாத நாடு நிரந்தர சமாதானத்தை நோக்கமாகக் கொண்டதாக அப் பேச்சுவார்த்தை அமையுமெனத் தெரிவித்துள்ளார்.

யுத்த தர்மத்தின் அடிப்படையில் பொருளாதார கொள்கை அமையுமென இரண்டாவது நிகழ்ச்சித் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. சகலருக்கும் வீடு, காணி, சேமிப்புக் கணக்கு என்பவற்றை இலக்காகக் கொண்ட பொருளாதார திட்டம், உலக வர்த்தக சந்தையை கைப்பற்றுவதே நோக்கமாக கொண்டதாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது நிகழ்ச்சித் திட்டமாக கிராமிய பொருளாதார வளர்ச்சியும், நான்காவது நிகழ்ச்சித் திட்டமாக வீட்டுப் பொருளாதாரமும், ஐந்தாவது நிகழ்ச்சித் திட்டமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், ஆறாவது நிகழ்ச்சித் திட்டமாக பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குடியிருப்பு, அடித்தள வசதிகளை ஏற்படுத்தல், ஏழாவது நிகழ்ச்சித் திட்டமாகவும், தொழிலாளர் உரிமையை பேணிப் பாதுகாப்பது எட்டாவது நிகழ்ச்சித் திட்டமாகவும், பாரம்பரியத்தை பேணுவது ஒன்பதாவது நிகழ்ச்சித் திட்டமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கைப்பேணுதல் பத்தாவது நிகழ்ச்சித் திட்டமாகவும் சூழல் பாதுகாப்பு, கிராமசபை நிர்வாகத்தை மேம்படுத்துதல், ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல், ஆன்மிக வளர்ச்சி என்பவை ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களாகவும் அறிவித்திருக்கும் ஐ.தே.க. நாட்டை ஒன்றிணைக்கும் இக் கொள்கையை அமுல்படுத்துவதே பதினைந்தாவது நிகழ்ச்சித் திட்டமாக முன்வைத்திருக்கின்றது.

நாட்டைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளையும் கொள்கை சம்பந்தமான அரசாங்கத்தினால் எடுக்கப்படும் செயற்பாடுகள் பற்றியும் அரசின் கொள்கை சம்பந்தமாகவும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய மட்டத்தில் ஒரு சம்மேளனத்தை அமைத்து, அதன் மூலமாக, சிவில் அமைப்புகளின் கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படும். (த-04)

## அன்ரன் பாலசிங்கம்...

இவர்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், கேணல் தீபன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மாலதி படையணி சிறப்பு தளபதி கேணல் விதுசா, தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமார்ன், சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா உட்பட பொறுப்பாளர்களும் போராளிகளும் வழியனுப்பி வைத்தனர்.

இன்று அதிகாலை விமானம் மூலம் அவர்கள் லண்டனுக்குப் புறப்படுகின்றனர். (த-4)

## சர்வதேச....

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து மக்களுமே நிலையான சமாதானத்தை விரும்புகின்றார்கள்.

எனவே குறுகிய நோக்கத்தில் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான முறையில் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களை அமுல்செய்யவேண்டும் என்றார். (த-04)

## அரச....

கப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட உடனடி மற்றும் நீண்ட காலத் திட்டங்களுக்கான பெருமளவு நிதியானது அரசிடம் ஒப்படைக்கப்படாமல் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதையே நாம் விரும்புகின்றோம் என்றார்.(த-04)

## அரசின்...

இதைவிடுத்து கொழும்பில் மட்டும் கூடிப் பேசுவது நன்மைதராது என்றும் கூறினார். (த-06)


### சிறுவிளம்பரம்

நல்ல நிலையிலுள்ள சிசில் 60 குளிர்சாதனப் பெட்டியும் லவ் பேர்ட்ஸ் (Love Birds) களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 819/1 மருத்துவ மனை வீதி, யாழ்ப்பாணம். T.P 222 5401 (9319)



### திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 18 ஆம் நாள் (31.01.2005) திங்கட்கிழமை பகல் 9.36 மணிமுதல் 10.03 வரை வரும் அத்த நட்சத்திரத்தில் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்



எமது புத்திரன் சிவதாஸன் அவர்களுக்கும் எமது புத்திரி தனுஷா அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:- 01.02.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி விஷ்ணுகாந்தி குடும்பத்தினர்
89/2 பத்திரகாளி கோயிலடி
வண்-வட மேற்கு, யாழ்ப்பாணம்

திரு. திருமதி பத்மநாதன் குடும்பத்தினர்
வாகையடி
இமையாணன், உடுப்பிட்டி

(இரு வீட்டார் அழைப்பு)

(C-1052)



### UNIT

கொழும்பு விலைக்கே யாழில்

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய
Compaq PIII 550/733/800/1000MHz,
10/15 GBHard Disk, 128 MB SDR,CDROM,
Zip Drive & etc.(ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்)

Rs. 27,000/- முதல்

PIV கணனிகள் DELL Monitor உடன்

எமது பிரத்தியேக 3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்

Rs. 49,900/- முதல்

Flash Memory (Kingston) - 3750/-
Aopen Combo DVD/CD + RW - 7400/-
Sony Combo DVD/CD + RW - 7600/-
Sony CD - Writter - 5100/-

மற்றும் சகல விதமான கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
மேற்குறிப்பிட்ட விலைகள் யாவும் கையிருப்பு உள்ளவரை மட்டுமே

Once step ahead

347, K.K.S. Road,
Manohara Theatre Junction,
Jaffna.

Universal Technology,
Station Road,
Chunnakam.



### சிறப்புத் தள்ளுபடி விலையில்

I.D.D லோக்கல் இணைப்புக்களுடன் எப் பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.




ஒருவருட உத்தரவாதம் உண்டு

விலை 13900/= மட்டுமே
I.D.D ரூபா 25/= மட்டுமே

அழைப்புக்கான வாடகை
மாதக்கட்டணம்:-150/=
வெளிச் செல்லும் அழைப்பு (பகல்) 1 நிமிடம்: 11/=
வெளிச் செல்லும் அழைப்பு (இரவு) 1 நிமிடம்: 6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் 1 நிமிடம்: 4/=
உள்வரும் அழைப்பு இரவு - இலவசம்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப் பிரதேசத்திற்கும் இயக்கக்கூடிய சேவையென அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயக்குகிறது மொபிடல் இணைப்பு

சிறிலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணைநிறுவனம்

குறிப்பு: டயலொக் மேசைத் தொலைபேசி இணைப்புடன் 12000/= மட்டுமே

New Branch:
No: 309A, Floor(Opp.union bank)
Galle Road Bambalapitiya
Colombo - 04

பவர் செலுலர் ரேடிங் கம்பனி

கையடக்கத் தொலைபேசிகள் திருத்தியும், புதிய கையடக்க தொலைபேசிகள் லொக் உடைத்தும் கொடுக்கப்படும்

Office: இல.185 முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
T.P. 212227070, 0712399220, 0777281521


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.